புதுக்கோட்டை ஸமஸ்தான

# தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1945-ம் ௵ ஏப்ரல் ௴ 28உ [ந. 246

தேசிய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிறார். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும்; ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பிரஸங்கம் CCXLVI.

## ஹிட்லர் முடிவு செய்து கொள்ளவேண்டியது.

(ஸர் எரிக் பிப்ஸ் ஜெர்மனியில் இருந்த மாஜி பிரிடிஷ் தூதர்).

தோல்வி ஏற்படும்பொழுது ஹிட்லர் தற்கொலை செய்துகொள்ளுவான் என்பது நிச்சயம் என்று இரண்டு வருடங்களுக்குமுன் லண்டனில் உள்ள கியாதிபெற்ற சங்கத்தில் சிற்றுண்டி அருந்தும்போது நான் சொன்னேன்.

எனக்கு எதிரில் இருந்த பிரபல நிர்வாக அங்கத்தினர் 'இது ரொம்ப விசித்திரமாயிருக்கிறது. ஹிட்லர் இந்த முறையை ஒரு பொழுதும் கையாளமாட்டார் என்று என்னுடைய நண்பர் சொல்லியிருக்கிறார்' என்றார்.

நாங்கள் விவாதித்தோம். நான்கு வருடங்களாக ஹிட்லருடன், எனக்கு ஏற்பட்ட சொந்த அனுபவத்தைக் கொண்டு சொல்லுகிறேன் என்று நான் எடுத்துச் சொன்னேன். அந்தக் காலத்தில் நான் ஹிட்லரை அடிக்கடி சந்தித்து $1\frac{1}{2}$ மணிக்குக் குறையாமல் சம்பாஷிப்பதுண்டு என்றும் சொன்னேன்.

மந்திரியின் சிநேகிதர் ஹிட்லரை அந்தரங்கமாக அறிவாரா என்று நான் கேட்டேன். அவர் ஹிட்லரையே பார்த்ததில்லை என்று பதில் வந்தது. ஹிட்லரின் ஒளிப்படங்களையும் சொற்பொழிவுகளையும் எழுத்துகளையும் இன்னும் மற்ற அம்சங்களையும் ஆராய்ச்சி செய்த ஒரு விஞ்ஞான சாஸ்திர நிபுணரின் அபிப்ராயம் என்று மந்திரி சொன்னார். அந்த ஆராய்ச்சியினின்றும் ஹிட்லர் நிச்சயமாக ஆடம்பரம் வெறிபிடித்தவன் என்றும் அதனால் அவன் தற்கொலை செய்துகொள்ளமாட்டானென்றும் நிச்சயமாய் முடிவுக்கு வரலாம்.

ஹிட்லர் ஒரு விதமான முடிவுக்கு வரவேண்டிய காலம் சமீபித்துவிட்டது. என்னுடைய சம்பாஷணைக்குப் பிறகு ஏற்பட்ட எந்த சம்பவமும் ஹிட்லர் தற்கொலைசெய்து கொள்வான் எனினும் அந்த அபிப்ராயத்தை மாற்றக்கூடியதாக இல்லை. பிறரால் அவன் கொலை செய்யப்பட்டாலும் படலாம்.

இந்த சந்தர்ப்பத்தில் நேசதேசத்தார்களுடைய அபிப்ராயப்படி இந்தப் பிரச்னைக்கு என்ன பரிகாரம் என்று கேட்கலாம். அவனை ஜெர்மானியர்களே கொல்லுவதுதான் தகுந்த சிக்ஷை. விசாரணைக்குமுன் அவனை அயல் நாட்டார் கொன்றால் ஹிட்லர் புகழை அது அதிகரித்து அவன் தேசத்திற்காக உயிர் துறந்தவன் என்ற புகழையும் அவனுக்குத் தந்துவிடும். அப்புகழ் அவனுக்குக் கொஞ்சமேனும் ஒவ்வாதது.

அகம்பாவம் பிடித்த சமத்வமுள்ள புத்தியில்லாத ஹிட்லர் பலஹீனமுள்ள நடுநிலைமை வகிக்கும் தேசத்தினிடமோ அல்லது ஜப்பானிடமோ சரணடைவான் என்று நான் நம்பவில்லை. அவன் பலஹீனத்தையும் நடுநிலைமையையும் மஞ்சள் ஜாதியாரையும் பூராவாக வெறுக்கிறான், ஓடானினால் உலகத்தை நடத்த தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர் இவ்விதமான அவமானத்திற்கு உட்படுவார் என்பது சாத்யமில்லை. நீங்கள் கேட்கலாம். மற்ற நாஸித் தலைவர்களும் ஜெர்மன் மக்களும் தோல்விக்குப்பின் என்ன செய்வார்கள். இரண்டாவது பகுதியைவிட முதலாவது பகுதிக்கு விடையளிப்பது மிகவும் சிரமசாத்யமான காரியம். மேலும் ஒவ்வொரு நாஸி பிரமுகரும் எவ்விதம் நடந்து கொள்வார் என்று ஊகித்துச் சொல்வது இக்கட்டுரையின் வரம்பை மீறியதாகும்.

ஆகையால் நாஸிகளில் கியாதி பெற்ற இருவரான மார்ஷல் கோயரிங்கையும் டாக்டர் கோயபல்ஸையும் நாஸிகள் அல்லாத ஆனால் கியாதி பெற்ற வான் பேபன், டாக்டர் ஷாட் முதலியவர்களையும் பற்றிச் சொல்கிறேன். காட்டுமிராண்டித்தனமும் பீத்திக்கொள்ளும் தன்மை உடையவும் ஆனால் பயங்காளியான கோயரிங்குக்கு நான் வகாலத்து வாங்கவில்லை. ஆகிலும் அவனுக்குச் சொந்த தைரியம் உண்டு. அவருடைய வாழ் நாட்களைவிட அவருடைய மரணம் சிலாக்யமாக இருக்குமென்று நான் நினைக்கிறேன்.

டாக்டர் கோயபல்ஸ் வஞ்சகமும் கபடமும் உருவெடுத்தவர். ஆகிலும் பெர்லினில் நான் நான்கு வருஷங்கள் இருந்தவரையில் அவருடைய சகவாசம்தான் எனக்கு உல்லாசமாக இருந்தது அவர் சூக்ஷ்மபுத்தியுள்ளவர். ஜெர்மானியர்களுக்குள் பரிகாசமனப்பான்மை உள்ளவர். அவர் ஹிட்லரிடம் உண்மையான விசுவாசம் உள்ளவர். ஆனால் அவரைப்பற்றி நான் அதிகமாகப் புகழ்ந்து பேசுகிறேன். ஹிட்லர் இல்லாத நாஸிதத்வம் சூன்யமானதென்றும் அதை ஒருவரும ஆராதிக்கமாட்டார்களென்றும் ஏற்பட்ட ஓர் நிச்சய புத்தியுடன் விசுவாசம் என்ற ஓர் வேஷத்துடன் அவர் ஹிட்லருடனும் பக்தி கொண்டிருக்கிறார். அவர் இவ்வுலகிலிருந்து மறைவது அவருடைய மனத்தோற்றத்தினால் அல்லாமல் புத்தி பரிபாகத்தினால் இருக்குமென்று நான் நினைக்கிறேன்.

எனவே கோயரிங்கும் கோயபல்ஸூம் எதிர்காலத்தில் நேசதேசத்தார்களுக்கு பேராபத்தை விளைவிக்கக்கூடியவர்களல்ல. அவர்களின் சரிதை மிகவும் அழுக்கானது. தெளிவானது. ரொம்பவும் அருசிகரமானது.

இப்பொழுது நேசதேசத்தார் வசம் கைதியாயிருக்கும் வான் பேபனுடையவும், நல்லவர் என்று சொல்லும் டாக்டர் ஷாட்டினுடையவும் நடவடிக்கைகள்தான் மிகவும் அபாயம் பொருந்தியவை. இவ்விரண்டு வழவழப்பான அயோக்கிய சிகாமணிகள் யுத்தத்துக்கு முன்னாடியே அவர்கள் உண்மையான நாஸிகள் அல்ல என்று என்னிடம் சொல்லி வந்தார்கள். ஆனால் இது ஒரு வகையில் உண்மைதான். அவர்கள் நாஸிகளும் அல்ல. இறக்கமற்ற பூரணமான அகம்பாவம் பிடித்த தங்களையே அவர்கள் ஆராதித்து வந்தார்கள். தங்களுடைய சொந்த எண்ணங்களுக்கு அனுகூலம் உள்ளதாயிருந்தால் அவர்கள் பிசாசுடனும் சந்தோஷத்துடன் நட்புக்கொண்டிருப்பார்கள்.

இருவர்களுள் ஷாட் அதிக சாமர்த்தியசாலி. ஆகையால் அவர் அதிக அபாயம் பொருந்தியவர். அவர் இந்தத் தீவிற்கு வந்து அவருடைய மாஜி பிரிடிஷ் சிநேகிதர்களை ஏமாற்றும் வகையில் பாழாகப்போன உலகத்தின் செல்வ நிலையை புனருத்தாரணம் செய்யும் திட்டத்தை ஆரம்பித்தால் அது நமக்கு குறிப்பிடத்தக்க கெட்ட நாளாக முடியும். ஏனென்றால் சமாதானத்தை இழக்க இந்நாடு மேற்கொள்ளும் முதல் நடவடிக்கையாக அது இருக்கும். தங்களைக் காப்பாற்றிக்கொள்ள அவர்களின் சிபார்சுகளை நாம் ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் நம்மையும் ஜெர்மன் மக்களையும் அழிக்க அவர்கள் பிசாசுகளைப்போல் ஆரம்பிக்கும் முறைகளை நாம் ஆமோதிக்கக்கூடாது.

ஜெர்மன் மக்களெல்லோரும் வரும் காலத்தில் முன்போல விசுவாசமற்றவர்களாயும் இறக்கமற்றவர்களாகவுமே இருந்து வருவார்கள். நம்முடைய அபிப்பிராயப்படி அவர்களிடம் ஒரு நல்ல குணம் காணப்படுகிறது. அதை நாம் நன்கு பயன் படுத்தலாம். அவர்கள் பலாத்காரத்திற்கு நன்கு கீழ்ப்படிந்து நடப்பார்கள். நாம் வலுவுடன் இருந்து அதிகாரம் வகிக்கும் வரையில் அவர்கள் கீழ்ப்படிந்து நடப்பார்கள். ஜெர்மனி சம்பந்தமான எந்தப் பிரச்னையிலும் நாம் ஒருவரோடு ஒருவர் சண்டை போட ஆரம்பித்தாலும், நீண்ட இடையூறுகளுள்ள சமாதான மார்க்கத்தில் நாம் பலஹீனமடைந்து தயங்கி நின்றாலும், நம்முடைய சிநேகிதர்களுக்குள் கலகமுண்டாக்கிவிடவும், பலாத்காரத்தினால் அடைய முடியாத நம்முடைய அழிவைத் தந்திரத்தினால் சாதித்துவிடவும், ஒரு தருணத்தை அவர்கள் வெகு சீக்கிரமாகக் கடைப்பிடித்து விடுவார்கள்.

# வார யுத்தச் செய்திகள்.

## (A)-முக்கியமான சம்பவங்கள்.

| | |
|---|---|
| 17—4—45 (செவ்வாய்க்கிழமை). | அமெரிக்கர்கள் ரெயிகியூஸிலுள்ள ஐயிஷிமாவில் இறங்கினார்கள். <br> செம்படை வியன்னாவுக்கு வடக்கிலுள்ள எண்ணெய் நிலயத்தை ஆக்கிரமித்தது. |
| 18—4—45 (புதன்கிழமை). | நேசதேசப்படைகள் மாக்டிபர்க்கையும் லீப்ஸிக்கையும் பிடித்தன. <br> பிரிடிஷ் எட்டாவது சேனை இதாலியில் ஆர்ஜண்டாவைப் பிடித்தது. |
| 19—4—45 (வியாழக்கிழமை). | ருஷ்யர்கள் பெர்லினை நோக்கித் தாக்கும் முறையில் ஓடர் நதியையும் நியஸி நதியையும் தாண்டிவிட்டார்கள். <br> நேசதேசப் படைகள் பர்மாவிலுள்ள சௌக்கைப் பிடித்தன. |
| 20—4—45 (வெள்ளிக்கிழமை). | அமெரிக்கர்கள் புரூவானுக்கு வடக்கிலுள்ள பாலாபாக்கைப் படையெடுத்தனர். <br> நேசதேசப் படைகள் மெய்க்டிலாவுக்குத் தெற்கில் 75 மைல்கள் முன்னேறின. |
| 21—4—45 (சனிக்கிழமை). | நேசதேசத்தார்கள் பொலோக்னாவைப் பிடித்தார்கள். |
| 22—4—45 (ஞாயிற்றுக்கிழமை). | செம்படை பெர்லினுக்குச் சுற்றுப்புற நகரமான பெர்னாவைப் பிடித்தது. <br> பிரெஞ்சுப் படைகள் ஸ்விஸ் எல்லையை அடைந்தன. |

## (B)-செய்திச் சுருக்கம்.

**பெர்லினுக்கான போர்.**—நடைபெறுகிறது. ஓடர் நதியிலிருந்தும் நியஸ்ஸி நதியிலிருந்தும் சுகாவ்விடமும் கோனியேவிடமும் உள்ள 9 ருஷ்ய சேனைகள் ஜெர்மன் தலைநகரைப் படையெடுத்துவிட்டன. இடையிலுள்ள மஸ்கான், வீஸ்வாசர், பார்ஸ்ட், ராதன்பர்க், ரீஸன், பர்னான் பிடிபட்டன. 9 மைல் இடைவெளிக்கு வெளியில் பெர்லின் சூழப்பட்டுவிட்டது. 29 சுற்றுப்புற விடுதிகள் பிடிபட்டுவிட்டன. டெம்பின்ஹாப் உள்பட மற்றும் நான்குக்குள் படைகள் நுழைந்துவிட்டன. ஹிட்லரும் கோயபெல்ஸூம் சரணடையக்கூடாது என்று உத்தரவிட்டிருந்தபோதிலும் வெண்மைக் கொடிகள் பறக்கவிடப்படுகின்றன.

**ஹாலந்து.**—கனடியத் துருப்புகள் சூடர்ஸீ நதியின் தென்கரையை ஆம்ஸ்டர்டாமிலிருந்து 20 மைல்களிலுள்ள கியூமின்ரீயில் அடைந்துவிட்டன. ஜெர்மானியர்கள் வி-குண்டுகள் புறப்படும் ஸ்தானங்களை அப்புறப்படுத்துகிறார்கள். வால் நதிக்கும் மாஸ் நதிக்கும் நடுவிலுள்ள தீவிலிருந்து பின்வாங்குகிறார்கள். சூடர்ஸீயினுடையவும் லேக்நதியுடையவும் அணைகளை உடைத்து வெள்ளப்பெருக்கை ஏற்படுத்திவிட்டார்கள்.

பிரிடிஷ் இரண்டாவது சேனை பர்னான், ஹாம்பர்க் பேரில் பீரங்கிப் பிரயோகம் செய்து வருகிறது. பர்னானுக்கு சமீபத்திலுள்ள பிரிங்கம், சேவர், டல்மன் ஹார்ஸ்ட், ராட்டன்பர்க், பக்ஸ்டிஹூட் முதலியவற்றை அது பிடித்துவிட்டது.

அமெரிக்க 9-வது சேனை மாக்டிபர்க்கை பிடித்தது.

**அமெரிக்க 3-வது சேனை செக்கோஸ்லாவேகியாவில் ஆஷ் என்னும் நகரத்தைப்பிடித்தது.**

**அமெரிக்க 1-வது சேனை டஸ்ஸல்டார்ப்பை பிடித்தது.**

அமெரிக்க 7-வது சேனை கிரேயில்ஷேமையும், டெஸ்ஸானையும் சுத்தி செய்து எல்வாங்கனைப் பிடித்தது.

அமெரிக்க 3-வது சேனையுடன் சேர்ந்து ஸ்விஸ் எல்லைச் சரகத்திலுள்ள கான்ஸ்டன்ஸை நோக்கி அது முன்னேறுகிறது.

**பிரெஞ்சு 1-வது சேனை.**—சர்வகலாசாலை நகரத்தையும் டியேபிவ்கனையும் வர்டம்பர்க்கின் தலைநகரமான ஸ்டட்கார்ட்டையும் பிடித்தது. கருங்காட்டில் 1,000 சதுரமைல்களை அது சுற்றி வளைத்துவிட்டது. ஸ்விஸ் எல்லைச் சரகத்தை அடைந்தது.

**இதாலி.**—போ நதிப் பள்ளத்தாக்குக்கு வாசற்படி போன்ற பொலோக்னு வீழ்ச்சி பெற்றது. நேசதேசப்படைகள் போ நதியை அடைந்துவிட்டன.

8-வது சேனை ஆர்ஜண்டா, போக்காலிபோன், பூட்ரியோ, டிராகெட்டோவைப் பிடித்தபின் பெர்ராராவை அடைந்துவிட்டது.

5-வது சேனை மாண்டி மோஸ்கொசா, மாண்டி டாவிகோ, மாண்டி அடானி, மாண்டி டிலேடே பிராடி, மாண்டி பாசிக்ஸியானோ, மாண்டி காடால்லா, ஆல்பெரோ, மாண்டி டெல்வா காபானு, காஸடர் நூவோ முதலியவற்றைப் பிடித்தது. அது மோடனுவுக்குள் சென்று பெர்ராராவைச் சுற்றி போர்புரிந்து வருகிறது. அது ஸ்பிசியாத் துறைமுகத்துக்கு 8 மைலுக்குள் வந்துவிட்டது.

பிரெஸிலியர்கள் சொக்காவையும, தென் ஆபிரிக்கர்கள் காகலக்கியோவையும் பிடித்தார்கள்.

டிடோ பைனிக்கருகில் செர்ஸோத்தீவிலிறங்கிவிட்டன.

**பஸிபிக்.**—

அமெரிக்கர்கள் பிமாரித் தீவை ஆக்கிரமித்து செருசொத் தீவிலிறங்கின. இரண்டும் ரெயிகியூஸ் தீவிலுள்ளவை.

தெற்கு ஓகினோவில் கடும்போர் நடைபெறுகிறது. ஜப்பானியர்கள் மேற்கு ஓகினுவாவிலுள்ள காகாடினைத் திருப்பிப் பிடித்துவிட்டார்கள்.

ஐயி ஷிமாவின் ஆக்கிரமணம் பூர்த்தியாகிவிட்டது.

பிலிப்பைன்ஸில் மிண்டானோவின் தாத்காலிகத் தலைநகரமான கோடாபாட்ஸ் ஆக்கிரமிக்கப்பட்டது.

அமெரிக்கப்படைகள் போர்னியோவுக்கருகிலுள்ள பால்யாக் தீவிலிறங்கிவிட்டார்கள்.

**சைனு.**—மேற்கு ஹூனனில் சீனப்படைகள் அமெரிக்க விமான தளமான சிங்கியாங்கை நோக்கி முன்னேறிய ஜப்பானியப் படைகளைத் தடுத்துவிட்டது.

**பர்மா.**—கெரிக்குக்கருகில் சிங்கு, ஸெல், சிக்பியூ என்ற மூன்று எண்ணெய் பிரதேசங்கள் பிடிபட்டன.

14-வது சேனை பின்மானுவையும், லெவெயையும் ஆக்கிரமித்துவிட்டது.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினுல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**15—4—45** (ஞாயிற்றுக்கிழமை).

ஜெர்மனி (Germany), இதாலி (Italy).

பகல்.—(647 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).

**பீரங்கி ஸ்தாபனங்கள், இதர தற்காப்புப் பிரதேசங்கள்.**—கிரோண்டி (Gironde) முகத்துவாரத்தின் இரு கரைகளிலும்.

**ரயில்வே இலக்குகள்.**—மியூனிச் (Munich) செக்கோஸ்லாவியாவில் உள்ள பில்ஸன் (Pilsen), பிராக் (Prague).

**ஜெர்மன் சைனியங்கள்.**—பொலோக்னுவின் (Bologna) தெற்கு.

**இலக்குகள்.—வட இதாலி (N. Italy).**

இரவு.—பெர்லின் (Berlin).

தூரக்கிழக்கு (Far East).

**ஜப்பானிய ஸ்தாபனங்கள்.**—டாவாவோ (Davao), மிண்டானோ (Mindanao) தீவுகள்.

ஸிப்பைகள்.—ஹாங்காங் (Hongkong).

கப்பல்.—காண்டோன் (Canton).

**ரயில் ஸ்தாபனங்கள்.**—பிரெஞ்சு இந்தோ-சைனு (French Indo-China).

**தொழிற்சாலை ஸ்தலங்கள்.**—டோக்கியோ (Tokyo), காவாஸகி (Kawasaki).

**பர்மா (Burma).**

**இலக்குகள்.**—டாங்குப் (Taungup) **ரஸ்தா.**

16—4—45. (திங்கட்கிழமை).

ஜெர்மனி (Germany), இதாலி (Italy).

பகல்.—சேனைகள், யுத்த தளவாடங்கள், தயார் செய்து சேமிக்குமிடங்கள்—ரீஜன்ஸ்பர்க் (Regensburg), லாண்ட்ஸ்பப் (Landsbup), கிலாட்லிங் (Glattling).

பாலங்கள்.—ரீஜன்ஸ்பர்க் (Regensburg), ஸ்டிராபிங் (Straubing).

கடற்படை தளம்.—ஸ்வெயன்மண்டி (Swinemunde).

இலக்குகள்.—நேசதேச சேனைகள் முன்னேறும் பிரதேசங்கள்,

இரவு.—பேர்லின் (Berlin).

தூரக்கிழக்கு (Far East).

மீதமான ஜப்பானிய சேனைகள்.—பிலிப்பைன் ஸிலுள்ள லூஸான் (Luzon).

பர்மா (Burma).

ஜப்பானிய முகாம் பிரதேசம்.—கியிப்வீ (Kywebwe).

துருப்பு முகாம்.—டவுன்கூ (Toungoo).

இலக்குகள்.—டாங்குப் (Taungup) ரஸ்தா.

ஜப்பானியர் ஆக்கிரமித்த கிராமங்கள்.—அரக்கான் (Arakan).

17—4—45. (செவ்வாய்க்கிழமை).

ஜெர்மனி (Germany), இதாலி (Italy).

பகல்.—கெஸ்ட்போ தலைமைக் காரியாலயம்—ஓடென்ஸ் (Odens).

5 ரயில்வே ஸ்தலங்கள்.—செக்கோஸ்லாவாக்கியா (Czechoslovakia).

3 ரயில்வே ஸ்தலங்கள்.—டிரஸ்டன் (Dresden).

இலக்குகள்.—போ (Po) சம வெளிப் பிரதேசம், வட இதாலி (Northern Italy).

தூரக்கிழக்கு (Far East).

6 விமான நிலயங்கள்.—கியுஷூ (Kyushu).

பர்மா (Burma).

ஒரு தகவலும் இல்லை.

18—4—45. (புதன்கிழமை).

ஜெர்மனி (Germany), இதாலி (Italy).

பகல்.—தீவிலுள்ள கடற்படை தளம்—ஹெலிகோலாந்து (Heligoland).

விமான நிலயங்கள்.—டூனி (Dune) தீவு.

ரயில் இலக்குகள்.—மேற்கு செக்கோஸ்லாவாக்கியா (W. Czechoslovakia), தென் ஜெர்மனி (S. Germany).

ரயில்வே இலக்குகள்.—கிலாட்டுவி (Klatovy), கோலின் (Kolin), பில்ஸன் (Pilsen).

இலக்குகள்.—வட இதாலி (N. Italy).

இரவு.—நாஸிக்கப்பல்கள் ஸ்காகராக் (Skagerrak), காட்டிகாட் (Kattegat).

தூரக்கிழக்கு (Far East).

**விமான நிலயங்கள்.—கியுஷூ (Kyushu).**

**ஜப்பானிய ஸ்தலம்.—லூஸானிலுள்ள பாகுயிக் (Baguio).**

பர்மா (Burma).

படகுகள்—பாங்காக்கிற்கும் (Bangkok), பாங்காந்தி (Banggondhi)-க்கும் இடையில்.

கப்பற் கட்டுந்துறைமுகங்கள்.—பாங்காக் (Bangkok).

ரயில்வே பாலங்கள்.—பாங்காக் (Bangkok), சிங்கப்பூர் (Singapore), லயன், பெகு (Pegu), யீ (Ye) ரயில்வே.

டாங்கிகள், பீரங்கிகள்.—மான்லி (Man-li).

ஜப்பானிய சைனியங்கள், ஸ்டோர்கள்.—பின்மானா (Pyinmana).

ரயில்வே ஸ்டேஷன்.—ஆக்ட்வின் (Oktwin).

ஒரு பாலம்.—ரெங்கூன் (Rangoon), புரோம் (Prome) ரஸ்தா.

சுரங்க வெடி பரவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

19—4—45. (வியாழக்கிழமை).

ஜெர்மனி (Germany), இதாலி (Italy).

பகல்.—ரயில்வே தளங்கள்.—செக்கோஸ்லாவாக்கியா (Czechoslovakia), ஜெர்மனி (Germany).

தீவு.—ஹெலிகோலாந்து (Heligoland).

ரயில் இலக்குகள்.—ஆஸ்திரியா (Austria), பிரென்னர் (Brenner) கணவாயின்மேல்.

மின்சார மாற்று நிலயங்கள்.—மியூனிச்சிற்கருகிலுள்ள பாஸிங் (Pasing).

துருப்பு முகாம்கள்.—பாலோக்னா (Bologna).

கப்பல்கள்.—ஸ்காகராக் (Skagerrak).

இரவு.—பேர்லின் (Berlin).

ஜெர்மன் கப்பற் கூட்டங்கள்.—ஸ்காகராக் (Skagerrak), காட்டிகாட் (Kattegat).

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயங்கள்.—டோக்கியோ (Tokyo) வின் வடக்கு.

ஜப்பானிய முனைகள்.—ஒகினாவா (Okinawa) வின் தெற்கு.

பர்மா (Burma).

ரயில்வே ஸ்டேஷன்.—பான்ப்வீகான் (Banbwegon).

ஸ்டோர் பிரதேசங்கள், துவியல்கள்.—டவுன்கூ (Toungoo)-வின் கிழக்கு.

இலக்குகள்.—டாங்குப் (Taungup), புரோம் (Prome) ரஸ்தா.

20—4—45. (வெள்ளிக்கிழமை).

ஜெர்மனி (Germany), இதாலி (Italy).

ரயில்வே இலக்குகள்.—மியூனிச் (Munich) சிற்கும் பிராக் (Prague).

எண்ணெய் துவியல் டெப்போ.—ரீஜன்ஸ்பர்க் (Regensburg).

இலக்குகள்.—ஷூவெய்சல் (Zweisel), முல்டார்ப் (Muhldorf), ஐரென்லோஹே (Irrenlohe), செக்கோஸ்லாவாக்கியாவில் உள்ள கிளாட்டோவி (Klatovy).

**இலக்குகள்.—பிரென்னர் கால்வாய் (Brenner Pass).**

ரயில்வே.—இன்ஸ்பிரக் (Innsbruck) முதல் ரோஸன்ஹீம் வரை (Rosenheim).
விமான நிலயங்கள்.—போ (Po) சமவெளி.
எதிரி சைனியங்கள், துவியல்கள், எண்ணெய் டெப்போக்கள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.
கப்பல்.—அட்ரியாடிக் (Adriatic).
மோட்டார் போக்குவரத்துகள்.—வட மேற்கு இதாலி (N. W. Italy).
பீரங்கி ஸ்தாபனங்கள்.—லிஸ்ஸினு (Lissino) தீவு.
இரவு.—பேர்லின் (Berlin).

தூரக்கிழக்கு (Far East).

கப்பல்கள்.—தென் சைனு பிரதேசம் (South China).
இலக்குகள்.—பிரெஞ்சு இந்தோ-சைனு (French Indo-China).
ஜப்பானிய முனைகள்.—ரெயிக்யூந்து உள்ள ஒகினுவா (Okinawa).

பர்மா (Burma).

ராணுவ துவியல்கள்.—அம்ஹாஸ்ட் (Amhorst).
ஸ்டோர் பிரதேசம்.—டவுன்கூ (Toungoo).
துருப்புகள் டாங்கிகள்.—ஸெட்கா (Setkaw).
படகுகள்.—டவுன்கூ (Toungoo)வின் தெற்கு.

21—4—45. (சனிக்கிழமை).

ஜெர்மனி (Germany), இதாலி (Italy).

பகல்.—ரயில் தளங்கள் ஸாதனங்கள்.—மியூனிச் (Munich), இன்கோல்ஸ்டாட் (Ingolstadt).
பகல்.—ரயில் தளங்கள், ஸாதனங்கள்.—மியூனிச் (Munich), இன்கோல்ஸ்டிட் (Ingolstadt).
விமான நிலயங்கள்.—லாட்ஸ்பர்க் (Landsberg).
ரயில்வே தளங்கள்.—ரோஸன்ஹீம் (Rosenheim).
தளங்கள்.—புச்சீம் (Pucheim).
கப்பல் முகாம்கள்.—ஹாம்பர்க் (Hamburg).
எதிரிக் கப்பல்கள்.—காட்டிகாட் (Kattegat).
இலக்குகள்.—போ (Po) சமவெளி.
இலக்குகள்.—பெர்லின் (Berlin), கீல் (Kiel).

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயங்கள்.—கியுஷு (Kyushu).

பர்மா (Burma).

ஒரு தகவலும் கிடைக்கவில்லை.

## விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

**16—4—45.** (திங்கட்கிழமை) **to 22—4—45.** (ஞாயிற்றுக்கிழமை).
பிரிடன் (Britain), ருஷ்யா (Russia.)—எதிரி விமான நடவடிக்கைகள் இல்லை.
தூரக்கிழக்கு (Far East).—ஒரு தகவலும் இல்லை.

---

# யுத்தக் குறிப்புகள்.

**வெற்றி வெகுதூரமில்லை.** பிரிஸ்டல் நகரத்தின் சுதந்திர கௌரவத்தை மிஸ்டர் எர்னஸ்ட் பெவினுக்கும், D. L. பட்டத்தை Mr. A. V. அலெக்ஸாண்டருக்கும் மிஸ்டர் சர்ச்சில் வழங்கியபொழுது பிரிஸ்டலில் சொற்பொழிவாற்றினர். அதில் பிரிடிஷ் படைகள் வெற்றியை சமீபித்திருப்பதற்கு மூன்று காரணங்கள் உண்டென்று அவர் சொன்னர். (1) நேசதேசக் கக்ஷியின் நீதிமுறை. (2) பிரிடிஷ் மக்களிடமுள்ள சுதந்திர உணர்ச்சி. இந்த ஜ்வாலை பரிசுத்தமாகவும், பளபளப்பாகவும், அவிக்கமுடியாத படிக்கும் ஜ்வலித்து நிற்கிறது. அந்த உணர்ச்சியினுல்தான் பிரிடிஷ் மக்கள் கவலையன்னியில் எவ்விதமான கஷ்ட சாத்யமான அலுவல்களையும் நடத்தி வருகிருர்கள். (3) நிர்வாக அங்கத்தினர்கள் பூர்ணமான விச்வாசமும் ஆதரவும். அதன் அங்கத்தினர்கள் கக்ஷி வேற்றுமையை ஒழித்து தேசத்தின் கௌரவத்தைக் காப்பாற்ற ஒன்றுபட்டார்கள்.

வி வி வி வி வி

**நீண்டகால பிரயாணமும் கூடிய சீக்கிரம் முடிந்துவிடும்.** என்று பிரதம மந்திரி சொன்னர். "நேசதேசப்படைகள் வெகு சீக்கிரத்தில் பெர்லினிலும், பால்டிக்கிலும் கூடர் சியிலும் வந்து விடுவார்கள். ஜெர்மானியர்கள் பூராவாக முறியடிக்கப்படும் காலமும் சமீபித்துவிடும். அவர்களில் அநேகர்கள் கைது செய்யப்படுவார்கள். உலகத்துக்குத் தீங்கிழைத்தவர்கள் நேசதேசத்தாரின் தயவை எதிர்பார்ப்பதைவிட வேறு வழியில்லை".

ஆகிலும் பேச்சை அடக்கிக்கொண்டு, யுத்த முடிவைக் கொண்டாடும் உத்தியோக முறை வைபவங்கள் சுருக்கமாகத்தானிருக்கும். ஏனெனில் ஐரோப்பியப் போரை முடித்தபின் **தூரக்கிழக்கிலுள்ள மற்றொரு எதிரியைத்தாக்க நாம் செல்லவேண்டும் என்று அவர் சொன்னர்.**

**ஜெர்மானியர்கள்.**

நேசதேசப்படைகள் ஜெர்மன் நகரங்களுக்குள் நுழையும் பொழுது அங்கு முட்டாள்தனமும் அதிகப்பிரசங்கித்தனமும் உள்ள ஜனங்களைக் காண்கிறார்கள். அவர்களை நாகரீக வழிக்குக் கொண்டுவர அவர்களுக்கு கல்வி போதிக்கப்படவேண்டும். இது நேசதேசத்தாருக்கு ஒரு மகத்தான பிரச்னை. அவனுடைய நாட்டில் அனுபவித்து வரும் கஷ்டங்களுக்கு அவன்தான் ஜவாப்தாரி என்றும் நேசதேசப்படைகள் ஜெர்மனியின் அக்கிரமப் போருக்கும் கொள்ளையடிப்புக்கும் பழி வாங்கும் முறையில்தான் ஜெர்மன் நகரங்களை அழித்து வருகிறார்களென்றும் அவன் அறிய வேண்டும். நன்றாய் போஷிக்கப்பட்டும், அடிமை வேலைக்காரர்களால் உல்லாசமாக வசிக்கும்படி செய்யப்பட்டும் ஐரோப்பிய நாடுகளைக் கொள்ளையடித்து சுகமாக வாழ்ந்துவரும் ஜெர்மானியர்கள் அவர்களைத் தொந்தரவு செய்ய அமெரிக்கர்கள் ஏன் இவ்வளவு தூரம் வரவேண்டுமென்பதை அறியக்கூடவில்லை. பயங்காளியானதால், இப்பொழுது நல்ல உதை கிடைக்கும்பொழுது அவன் விம்மி அழுது புகார் செய்கிறான். பிரிடனும், அமெரிக்காவும், ருஷ்யாவும் ஜெர்மன் நகரங்களை ராணுவ அவசியத்தினாலன்றி அக்கிரமமாக அழிக்கவில்லை என்பதை அவன் மறந்துவிடுகிறான்.

ஆனால் அவனிடம் தந்திரக் குறைவு இல்லை. நேசதேசப்படைகள் துருப்புகளுக்கு இட வசதியை அளிக்க முயற்சிக்கும்பொழுது அந்த வீட்டில் வியாதி பிடித்த பாட்டியும் அல்லது தொத்து வியாதியும் காணப்படுகிறது. அவனுடைய நாஸி தத்வம் பகுத்தறிவினால் ஒப்புக்கொள்ளப்பட்டதல்லவென்றும், அவன் இஷ்டப்படி விட்டிருந்தால் அவன் நாஸியாக ஆகியிருக்கமாட்டானென்றும் அவன் எளிதில் சொல்லி விடுகிறான்.

வி வி வி வி வி

**நாஸி கொள்ளைக் கூட்டம் கலைந்து வருகிறது.**

ஜெர்மனியின் கோச நிபுணரான டாக்டர் ஹிலாமார்ஷாட் இறந்துவிட்டதாகச் சொல்லப்படுகிறது. ஜெர்மன் மார்ஷலான கோயரிங் பெர்லினிலுள்ள அவனுடைய அரண்மனையிலிருந்து மனைவியுடனும் பெண்ணுடனும் பிரான்ஸிலிருந்தும் ஹாலந்திலிருந்தும் கொள்ளையடித்த 20 மிலியன் டாலர் பொறுமானமுள்ள நகைகளை எடுத்துக்கொண்டு ஏதோ ஒரு இடத்திற்கு விமானத்தில் சென்றுவிட்டான். பெர்லினின் தற்காப்பு கமிஷனரான டாக்டர் கோயபல்ஸ் மறைந்துவிட்டார். நகரத்தில் மனைவியுடனும் குழந்தைகளுடனும் இருந்துவருவதாக உள்நாட்டு ஒலிபெருக்கில் அவன் ஜெர்மானியர்களுக்கு ஒலிபெருக்கிறான். இது அவனுடைய கடைசிப் புழுகாக இருக்கலாம்.

வி வி வி வி வி

**ஜெர்மன் ஒலிபெருக்குகள் மூடப்பட்டன.**

மறுமுறை ஒலிபெருக்கில் பேசலாமென்று கோயபல்ஸ் நினைத்தால் அதற்கும் அநேக இடையூறுகள் காணப்படுகின்றன. பெர்லினிலிருந்து 12 மைல் தூரத்தில் கோனிக்ஸ்—வஸ்டார்ஹாஸனிலுள்ள முக்கியமான ஜெர்மன் ரேடியோ நிலயம் நேசதேச வசமாகிவிட்டது. அங்கு இனிமேல் நேசதேசத்தார்கள் ஒலிபெருக்குவார்கள். ஒன்றன்பின் ஒன்றாக மற்ற ரேடியோ நிலயங்களும் மூடப்படும்.

ஹிட்லரின் கொண்டாடப்படாத பிறந்த தினத்தன்றுதான் கோயபல்ஸ் சமீபகாலத்தில் ஒலிபெருக்கில் பேசினான். அந்தப்பேச்சில், ஜெர்மானியர்கள் துக்ககரமான நாடகத்தின் கடைசி கட்டத்திலிருக்கிறோமென்றும், நாம் கத்தி முனையிலிருக்கிறோம் என்றும் ஜெர்மானியர்களுக்கு அவன் ஒலிபெருக்கினான். ஆகிலும் அவன் உண்மையைச் சொல்லவில்லை. அவன் பின்வருமாறு பீத்திக்கொண்டான்: "நமது எதிரிகள் நம்மைக் காயப்படுத்தலாம். ஆகிலும் அவர்கள் நம்மைக் கொன்றுவிட முடியாது. அவர்கள் நம்மைத் தாக்கலாம். ஆகிலும் சரண் புகுந்து விடும்படி செய்யமுடியாது. ஆகிலும் முக்கியமான இத்தருணத்தில் சோர்ந்து விடாதீர்கள். ஒருபொழுதும் சரணடைய நினைக்காதீர்கள். ஜெர்மன் கொடிக்கு பதிலாக வெள்ளைக்கொடியைப் போடாதீர்கள். யுத்தத்துக்கு சில வருஷங்களுக்குப்பின் ஜெர்மனி முன்னைவிட அதிக பலம் படைத்துவிடும். அழிபட்ட ஜெர்மன் பூமியில் புதிய, அதிக அழகான நகரங்களும் கிராமங்களும் தோன்றும், சந்தோஷமாக ஜீவிக்கும் ஜனங்களும் தோன்றுவார்கள். ஹிட்லரை எல்லோரும் நம்புங்கள்.

வி வி வி வி வி

**லீப்ஸிக் தற்கொலைகள்.**

சரணடையக் கூடாதென்று ஹிட்லரின் உத்தரவும் ஜெர்மன் துயரமும் கோரமாகி வருகிறது. லீப்ஸிக்கைப் பிடித்ததே ஒரு துக்ககரமான அத்யாயம். நகர மேயரும், அவருடைய மனைவியும், 18 வயதுள்ள பெண்ணும், டெபுடி மேயரும், அவருடைய மனைவியும் டவுன் ஹாலில் நடைபெற்ற சாராயக் கச்சேரியில் ஒருவருக்கொருவர் விஷத்தைக் கொடுத்து தற்கொலை செய்து

கொண்டார்கள். நாஸி டெபுடித் தலைவர் சுட்டுக்கொண்டு இறந்தார். ஆயுதசாலையின் மானேஜிங் டிரெக்டர் தன்னையும் தொழிற்சாலையையும் வெடி மருந்தினால் அழித்துக் கொண்டார்.

வி வி வி வி வி

**பெர்லினின் அதோகதி.** ஜெர்மன் தலைநகரம் பிராணனை இழக்கும் அவஸ்தையில் இருக்கிறது. ஓடர் நதி, நிஸி நதியிலிருந்து ஒன்பது சேனைகளுடன் முன்னேறிய சூகோவும், கோனியேவும் நகரத்துக்குள் நுழைந்துவிட்டார்கள். பெர்லின் அழிந்து வருகிறது. அங்கு பீரங்கி குண்டுகளும் வெடி குண்டுகளும் விழுந்துகொண்டிருக்கின்றன. பெர்லினிலுள்ள 15 வயது முதல் 65 வயது வரையிலுள்ளவர்கள் தெருத்தெருவாகவும் வீடுவீடாகவும் கொரில்லாப் போரை நடத்தவேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. பெர்லினின் முடிவை ஒத்திவைக்க ஜெர்மானியர்கள் சகலவிதமான உபாயங்களையும் கையாண்டு வருகிறார்கள். ஆனால் பெர்லினின் அதோகதி நிச்சயம். ஒன்பது மைல் இடைவெளியைத் தவிர பெர்லின் பூராவும் சுற்றி வளைக்கப்பட்டுவிட்டது. சுற்றுப்புறத்திலுள்ள 29 விடுதிகள் கைப்பற்றப்பட்டுவிட்டன. நான்கு விடுதிகளுக்குள் படைகள் நுழைந்துவிட்டன. ஏப்ரல் 23-ம் தேதி மேலே சொல்லிய ரிபோர்ட்டு கிடைத்திருக்கிறது.

ஹிட்லர் பெர்லினிலிருக்கிறான். அவன் முஸோலினிக்கு ரேடியோ மூலம் பின் கண்ட செய்தியை அனுப்பியிருக்கிறான்.

"நாம் ஜீவித்திருப்பதற்கான போர் உச்ச நிலைமையை அடைந்துவிட்டது. ஏராளமான தளவாடங்களை உபயோகப்படுத்தி ருஷ்யாவும் யூதர்களின் படைகளும், ஐரோப்பாவை குழப்பத்தில் அமிழ்த்திவிடுவதற்காக ஜெர்மனியில் ஒன்றுபடுவதற்காக எல்லாவற்றையும் தியாகம் செய்துவருகிறார்கள்."

கோயபல்ஸ் பின்வருமாறு சொன்னான். "முக்கியமான போர் படைகள் ஜெர்மன் தலைநகருக்கு வந்திருக்கும் பொழுது சொல்லுகிறேன். ருஷ்யர்கள் பெர்லினைப் பிடித்து, பிராக்கையும் கைப்பற்றிக்கொண்டால் ஐரோப்பா தப்பிப்பிழைக்க யாதொரு நம்பிக்கையும் இல்லை."

அவர்கள் எவ்விதம் பேசினாலும் சரி. போர் நான்கு அம்சங்களில் நடைபெறுகிறது. ஆகாயத்திலும், வீட்டின் மேல் தட்டிலும், கட்டடங்களுக்கு வெளியிலும், பூமியின் கீழும் நடைபெறுகிறது. ஜெர்மானியர்கள் அகிழ்களையும் விமானத் தாக்குதலின் பொழுது ஒளித்துக் கொள்ளும் அறைகளையும் தற்காப்புக்கு உபயோகித்து வருகிறார்கள்.

ஹிட்லரும், கோயபல்ஸும் போட்ட உத்தரவுகளை மீறி வெள்ளைக் கொடிகள் பறக்கின்றன.

வி வி வி வி வி

**தெற்கு கொத்தளம்.** இதே சமயத்தில் மற்ற நான்கு படைகள் ஹிட்லரின் தெற்கு அரண்களை நோக்கி முன்னேறுகின்றன. அதாவது, பிரெஞ்சு 1-வது, அமெரிக்க 7-வது, அமெரிக்க 3-வது, ருஷ்ய யூக்ரேனிய, 2, 3, 4-வது சேனைகள் குவிந்து வருகின்றன.

வி வி வி வி வி

**மேற்குப் போர்முனை.** ரூர் பிரதேசத்துக்கான போர் முடிந்துவிட்டது. ஜெர்மனியின் பாதிபாகம் நேசதேச வசமாகிவிட்டது. ஸீக்பிரட் அரண நேசதேசப்படைகளை எதிர்த்துப்போராடி ஒவ்வொரு ஜெர்மன் ஸோல்ஜரும் கொல்லப்பட்டான், அல்லது காயம்பட்டான் அல்லது கைது செய்யப்பட்டான். ரைன் நதி கடக்கப்பட்டபின் 8,42,864 ஜெர்மானியர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அமெரிக்க 9-வது சேனை ருஷ்யப்படைகளுடன் டிரெஸ்டனுக்கருகில் சேர்ந்துவிட்டது. அமெரிக்க 3-வது சேனை செகோஸ்லாவேகியாவுக்குள் நுழைந்து ஆஷ் உள்பட அநேக இடங்கள் பிடித்துவிட்டது. டஸ்ஸல்டார்பைப் பிடித்த அமெரிக்க 1-வது சேனை டெஸ்ஸானுக்குள் நுழைந்துவிட்டது. ஹார்ஸ் பகுதியை சுத்திசெய்துவிட்டது. அமெரிக்க 9-வது சேனை மாக்டிபர்க்கை சுத்திசெய்தது. பிரிடிஷ் 2-வது சேனை பிரெமனையும் ஹாம்பர்க்கையும் நொருக்கிவிடுகிறது.

வி வி வி வி வி

**ஹாலந்தின் துயரம்.** ஹாலந்துக்கான போர் நேசதேசத்தாருக்கு திருப்திகரமாக நடைபெற்றபோதிலும், ஜெர்மனியின் காட்டுமிராண்டித் தனத்தினால் ஹாலந்துக்கு அதிக நாசம் ஏற்பட்டுவருகிறது. கனடிய 1-வது

சேனை ஓல்டன்பர்க்கையும் வில்ஹெல்ம்ஷாவனையும் ஆம்ஸ்டர்டாமுக்குக் கிழக்கில் 20 மைல்களிலுள்ள எதிரியின் கிரப்ஸ் அரண்களையும் நோக்கி உறுதியுடன் முன்னேறிவருகிறது.

இந்த இடத்தில் ஜெர்மானியர்கள் சூடர்ஸீயினுடையவும் லெக் நதியினுடையவும் மடைகளைத் திறந்து வெள்ளப்பெருக்கு ஏற்படுத்திவிட்டார்கள். சாகுபடிக்கு லாயக்குள்ள 50,000 ஏகர்கள் 16-அடித் தண்ணீருக்குள் மூழ்கியிருக்கின்றன. அகதிகள் ஹார்லம், ஆம்ஸ்டர்டாம், ஹேகுக்குள் ஓடிவருகிறார்கள்.

வி வி வி வி வி

**இதாலி.** இதாலியில் வசந்த காலத்தாக்குதல் நேசதேசத்தாருக்கு வெற்றிகரமாக ஆரம்பமாகிற்று. போ நதிப் பள்ளத் தாக்கிலுள்ள முக்கிய நகரமான பொலோக்ன விழுந்துவிட்டது. தெற்கு, மேற்கு, கிழக்கிலிருந்து குவிந்துவந்த பிரிடிஷ் 8-வது சேனையும், அமெரிக்க 5-வது சேனையும், இடிஸ் நதி உள்பட ஆறு நதிகளைத்தாண்டி 11 நாட்கள் சிரமப்பட்டன. 8-வது சேனையும், ஓய் வன்னியில் ஆறு நாட்கள் வரையில் போரை நடத்திய 5-வது சேனையும் குவிந்து பொலோக்னவைப் பிடித்தன.

இந்த வெற்றியின் கௌரவம் ஸோல்ஜர்களுக்கும், மாலுமிகளுக்கும், விமானிகளுக்கும், உரித்ததாகும். ஏனென்னில் நடவடிக்கை மூவகைப்பட்டது. இந்த வெற்றி முயற்சியில் பிரிடிஷ், அமெரிக்க, இந்திய, நியூஸிலாந்து, போலிஷ், பிரெஸிலியன், தெற்கு ஆபிரிக்க, யக்ஷ்தி, இதாலியப்படைகள் ஈடுபட்டன.

வி வி வி வி வி

**பஸிபிக்.** பிலிப்பைன்ஸில் மின்டானோவில் சாவாதானமாகப் படைகள் முன்னேறி வருகின்றன. ஒகினவாத் தீவில் கடும்போர் நடைபெறுகிறது. ரெயூகிஸை சேர்ந்த காகாடின், பினரி, என்ற மற்ற இரண்டு தீவுகளில் படைகள் புதிதாக இறங்கிவிட்டன. பினரித் தீவு ஆக்கிரமிக்கப்பட்டது.

**பர்மா.** மெய்க்டிலாவிலிருந்து யாமாதின் வழியாக ஷாய்ன் நாடுகளுக்கு முன்னேற்றம் நடவடிக்கை தொடர்ச்சியாக நடைபெறுகிறது. மௌண்ட் போபாவைப் பிடித்தபின் எண்ணெய்ப் பிரதேசங்களை அணுக 14-வது சேனைக்கு அதிக சௌகரியம் கிடைத்துவிட்டது. ரங்கூனை நோக்கி முன்னேறுவதைப்பற்றியும் எண்ணெய்ப் பிரதேசங்களுக்குப் போகும் இருப்புப் பாதையுள்ள கியாக்பாடங்குக்குத் தெற்கிலுள்ள நடவடிக்கையைப்பற்றியும் தகவல்கள் ரகசியமாக வைக்கப்பட்டிருக்கின்றன.

வி வி வி வி வி

**ருஷ்ய—போலிஷ் ஒப்பந்தம்.** நட்பு, பரஸ்பர உதவி, யுத்தத்துக்குப்பின் ஒற்றுமைப்பு என்ற ஷரத்துகள் கொண்ட ஒரு ஒப்பந்தம் ருஷ்யாவுக்கும் போலந்தின் தாத்காலிக நிர்வாகத்துக்கும் முடிவடைந்திருக்கிறது. லண்டனிலுள்ள போலிஷ் நிர்வாகமும் உலக பத்திர ஸ்தாபனத்துடன் ஒத்துழைப்பதற்காக ருஷ்யாவுடன் உடன்படிக்கை செய்துகொள்ளத் தயார் என்று அறிக்கையை வெளியிட்டிருக்கிறது.

வி வி வி வி வி

**லட்சௌ மூழ்கிற்று.** ஏப்ரல் 16-ம் தேதியன்று பால்டிக் துறைமுகமான ஸ்வென் முண்டியில் 12,000 ராத்தல் வெடிகுண்டுகளை வீசும் பிரிடிஷ் லங்காஸ்டர் விமானங்கள் ஜெர்மனியின் கடைசி யுத்தக் கப்பலை லட்சௌவை மூழ்கடித்தன. பிரிடிஷ் விமானப்படை இதுவரையில் நான்கு ஜெர்மன் யுத்தக் கப்பல்களை மூழ்கடித்திருக்கிறது. நிஸ்நா, டிர்பிட்ஸ், அட்மிரல் ஷீர் என்ற கப்பல்கள்தான் இதற்கு முன் மூழ்கடிக்கப்பட்டவைகள். ஜெர்மனியிடம் இன்னும் ஒரு சஞ்சாரி பாக்கியிருக்கிறது.

வி வி வி வி வி

**ஜெர்மனியும், ஸ்பெயினும்.** நேசதேசத்தாரின் சிபார்சின் பிரகாரம் ஸ்பானிஷ் பூமியில் ஜெர்மன் விமானங்கள் இறங்குவதை ஸ்பெயின் தடுத்துவிட்டது. உத்தரவை மீறி எந்த விமானமும் ஸ்பெயினில் இறங்கினால் அதை உடனே புறப்படும்படி ஸ்பெயின் உத்தரவிடும். அதன் விமானிகள் "வேண்டப்படாதவர்கள்" என்று கருதப்படுவார். இவ்விதமாக ஜெர்மனிக்கும் ஸ்பெயினுக்குமுள்ள ஆகாய சம்பந்தம் போய்விட்டது. இனிமேல எதிரிகள் நீர்மூழ்கி மூலமதான் ஸ்பெயினுக்குச் செல்லலாம்.

# ஐரோப்பாவில் ஜெர்மனியின் எல்லைப்புற தற்காப்புகள்.

## நாஸிகள் ஜெர்மனியில் சமாளித்து நிற்பார்களா ?

### (மாஞ்செஸ்டர் கார்டியனின் ராணுவ நிருபர்).

ஜெர்மனியின் பெரும் பாகங்கள் நேசதேசவசமாகி வருகிறபடியால் ஐரோப்பாவின் பல பாகங்களிலுள்ள ஜெர்மன் எல்லைப்புற தற்காப்புகளின் பிரச்னை முக்கியத்துவம் அடைந்து வருகிறது. வடக்கு இத்தாலியில் சுமாராக 23 ஜெர்மன் டிவிஷன்களும் நார்வேயில் 13 அல்லது 14 டிவிஷன்களும், டென்மார்க்கில் சிலபடைகளும், ஹாலந்தில் 5 டிவிஷன்களும், இன்னும் இருக்கின்றன. பிரெஞ்சு அட்லாண்டிக் துறைமுகமான லோரியானிலும் ஸெயின்ட் நாஸரேயிலும் கிராண்டி நதியின் முகத்துவாரத்திலும் சில ஜெர்மன் படைகள் நின்று கொண்டிருக்கின்றன. ஹாலந்திலுள்ள ஜெர்மன் படைகளைத்தாக்கிவரும் பிரிடிஷ், கனடியப் படைகளும், ஹனேவருக்குள் முன்னேறும் பிரிட்டிஷ் படைகளும் டென்மார்கிலுள்ள ஜெர்மன் தற்காப்புகளை சமீபகாலத்தில் அகற்றிவிடும். ஆனால் நார்வே சம்பந்தப்பட்ட பிரச்னையில் விசேஷமான சிரமம் இருக்கிறது.

நார்வேயில் போர்நடத்துவது அவசியமா என்பது சொல்ல இயலாதது. நார்வேயில் உள்ள ஜெர்மானியர்களை ஆயுதங்களைப் போட்டுவிடும்படிக்கும், நார்வீஜிய அதிகாரிகளிடம் சரணடையும்படிக்கும், உத்தரவிடுவதுதான் சிறந்த நடவடிக்கை என்று தோன்றுகிறது. அவ்வித உத்தரவை யார் பிறப்பிவிக்கிறது? அங்குள்ள தலைவர்கள் அதற்குக்கீழ்ப்படிந்து நடப்பார்களா? ஜெர்மானியர்கள் நார்வேயில் மிகவும் இழிவாக நடந்துகொண்டிருக்கிறார்கள். பிரான்ஸில் நடந்ததுபோல் ஜெர்மானியருக்கு ஏற்பட்டுள்ள குற்றமுள்ள நெஞ்சமும், அக்கிரமத்திற்கு பதிலாக ஏற்படும் விளைவுகளின் பீதியும் நார்வீஜிய மக்களிடம் சரணமடையக்கூடாதென்று ஜெர்மானியர்களைக் கெடுத்துவருகிறது. பிரான்ஸிலுள்ள ஜெர்மானியர்கள் போர்புரியும் பிரெஞ்சுப்படைகளிடம் சரணடைவதைவிட பிரிடிஷ், அமெரிக்கப்படைகளிடம் சரணடையப் பிரியப்பட்டார்கள். இதே மனப்பான்மைதான் நார்வேயிலும் காணப்படும்.

இந்த மனப்பான்மை இருந்துவந்தால் இதை நிவர்த்திக்க அங்கும் நேசதேச நடவடிக்கை அவசியமாகும். ஆனால் மத்ய ஜெர்மனி பூராவாக வீழ்ச்சி பெற்றால் நம்பிக்கைக்கு இடம் இல்லை என்ற நிச்சயமான உணர்ச்சி ஜெர்மனிலிருந்து வெகுதூரத்திலுள்ள ஜெர்மானியர்களைப்போரை நிறுத்திவிடும்படி தூண்டிவிடும். இது காலக்கிரமத்தில்தான் நேரிடும். ஆனால் ஒன்று நிச்சயம். ஜெர்மனியிடம் அதிகாரம் சொல்பமேனும் இருந்துவரும் வரையில் எல்லைச் சரகத் தற்காப்புகளின் பிரயோஜனத்தை அவலம்பித்து லாபம் சம்பாதிக்கவோ, பிறரைத்துன் புறுத்தவோ அவர்கள் முயற்சி செய்துவருவார்கள்.

இத்தாலியிலும், நார்வேயிலும் உள்ள டிவிஷன்களும், பிரெஞ்சு அட்லாண்டிக் துறைமுகங்களிலிருந்துவரும் லக்ஷம் ஜெர்மானியரும் ஜெர்மனிக்காக நடைபெறும் இறுதிப்போர்களுக்கு அவசியமானவை. ஆகிலும் அவைகள் ஜெர்மனியின் இஷ்டப்படி அங்கு இருக்கவில்லை. ஜெர்மனியின் போக்குவரத்து மார்க்கங்கள் பலமாக சீர்கெட்டுப்போய் விட்டதால் சிலவாரங்களுக்கு முன்பு ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் வெளிநாடுகளிலிருந்து ஜெர்மனிக்கு படைகளைக் கொண்டுவருவதாக உத்தேசித்திருந்தாலும் அவர்கள் ஒரு அற்பமான பாகத்தைத் தான் கொண்டுவந்திருக்கமுடியும். கட்டாயத்தின்பேரில் அங்கு தங்கநேரிட்ட படைகளை ஜெர்மானியர்கள் அவர்களுக்கு சௌகரியம் ஏற்படக்கூடிய அளவுக்கு உபயோகப்படுத்தலாம். பிரஞ்சு அட்லாண்டிக் துறைமுகங்களிலுள்ள படைகள், ஜெர்மன் சேனையின் முறியடிக்கப்படாத பாகமாக இருக்கப்போவதகவும் யுத்தத்துக்குப்பின் ஜெர்மனியில் புதிய ஜெர்மன் சேனையைத்தயாரிக்க மூலாதாரமாக இருக்கப்போவதாகவும் பகிரங்கமாக சொல்லி வருகின்றன.

---

# எதிரி தப்பியோடும் வழிகளைத் துணிப்பது.

## ஹாலந்தில் 21-வது சேனையின் முன்னேற்றம்.

### (லெப்டினெனண்ட் ஜெனரல் ஸர் டக்ளஸ் பிரௌன்ரிக்.)

இரண்டு வாரங்களுக்கு முன்பு ரைன் நதியின் கிழக்குக் கரையில் ஜெனரல் ஹாட்ஜஸ்ஸின் படைகள்தான் ரமேசன் என்ற பால முனையில் முன்னேறின என்று சொல்லுவதற்கில்லை. பிரிடிஷ் அமெரிக்க கவசம் பூண்ட படைகளும் ஜெர்மனிக்குள் 100 மைல்களுக்கு மேல் முன்னேறியிருக்கின்றன. சிற்சில எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் அவை முன்னேறி வருகின்றன.

இந்தப் படைகளின் முன்னேற்றம் அநேக திசைகளிலிருந்து நடைபெறுவதாக தேசப் படங்களில் காணப்படுகிறது. ஆனால் இந்தப்படைகள் எல்லாம் சமமான பிரயோஜன முள்ளவை அல்ல. அவைகளின் உபயோகம் அவைகளைப் பின்பற்றி வரும் சாதகங்களைப் பொருத்தது. இது புதிய மாதிரி தோன்றக்கூடும். அதை நான் விவரணம் செய்கிறேன்.

உதாரணமாகச் சொன்னால் ரைன் நதிக்கு மேற்கிலுள்ள பிரதேசம் ரூருக்கு வடக்கில் பொட்டலாகவும் திறப்பாகவும் உள்ளது. ஆனால் அதற்குத் தெற்கில் குன்றுகள் இருக்கின்றன. வடக்கு சமவெளியின் குறுக்கேதான் ஈஸன் ஹோவர் பலமாக முன்னேறி வருகிறான். 21-வது சேனை ரைன் நதியை 60 மைல் நீளத்தில் தாண்டிற்று. ஆகையால் கவசம் பூண்ட படைகளின் முன்னேற்றத்தைக்கண்டு நாம் மயங்கிவிடக்கூடாது. அவைகளுக்குப் பின்னால் சாவதானமாக முன்னேறி வரும் படைகளையும் நாம் மறந்துவிடக்கூடாது. ஜெனரல்கள் ஹாட்ஜஸ், பாட்டன், பாட்ச், முதலியவர்களின் பலமான தாக்குதல்கள் ஜெர்மன் மக்களிடையே குழப்பத்தையும் பீதியையும் உண்டுபண்ணி வருகின்றன. ஜெர்மனியின் கடைசி தற்காப்பான மலைப்பிராந்தியங்களுக்கும் ஆபத்து நேரிடுமோ என்று நாஸித் தலைவர்கள் கவலைகொண்டுவிட்டார்கள். 21-வது சேனை இருக்கும் யுத்த சரகத்தில் மேற்கு ஜெர்மனியை ஆக்கிரமிப்பதைவிட சாஸ்வதமான ஒரு நிகழ்ச்சி ஏற்பட்டு வருகிறது. மாண்ட்காமரியின் புகைப்படலம் அவருடைய கவசம் பூண்ட படைகளுக்குப்பின் வியாபித்து விட்டது. இதே சமயத்தில் 21-வது சேனையின் இடது பார்ச்வம், ஹாலந்திலுள்ள ஜெர்மன் படைகள் பின் வாங்கும் மார்க்கத்தை துண்டிக்க வடக்கு நோக்கி விசிறிபோல் பரவி வருகின்றன. ஹாலந்திலுள்ள படைகள் ஏன் தப்பியோட முயலுகின்றனவென்றும், ரூரிலுள்ள சேனைகள் சுற்றி வளைத்துக்கொள்ளும் நிலைமைக்கு ஏன் உட்படுகின்றனவென்றும், கவனிக்கவேண்டும். எதிரிகளின் ஸப்ளை மார்க்கங்களை வழி மறிப்பதற்காக ஜெர்மானியர்கள் அநேக இடங்களில் சிறு சிறு படைகளை ஏற்கனவே வைத்திருக்கிறார்கள்.

இந்த உபாயம் ஜெர்மனிக்கு அநேக சமயங்களில் சௌகரியமாக இருந்திருக்கிறதென்று நாம் ஒப்புக்கொள்வோம். நேராக நின்று எதிர்த்துப் போரிடுவதைவிட இந்தப் படைகள் நேசதேசத்தாருக்கு அநேக சமயங்களில் காலதாமதம் உண்டுபண்ணியிருக்கின்றன. இதற்கு உதாரணம் ஷெல்ட் நதி முகத்துவாரத்தில் ஜெர்மனியர்கள் நிலைத்து நின்றது. ஆண்ட்வர்ப் துறைமுகம் நேசதேசத்தாருக்கு கிட்டாமல் செய்ததிலிருந்து அவர்கள் ஜெர்மனியின் படையெடுப்பை தாமதப்படுத்திவிட்டார்கள். ஹாலந்திலிருந்து பின்வாங்கி ஜெர்மன் படைகளுடன் சேர்ந்துகொண்டிருந்தாலும் அவைகள் இவ்வளவு காலஹரணம் செய்திருக்க முடியாது.

ரூரில் ஜெர்மானியர்கள் படைகளை காரணத்துடனேயே வைத்திருக்கலாம். இதற்கு மற்றொரு காரணமும் இருக்கலாம். மனங்கலங்கியிருக்கும் ராணுவ அதிகாரிகள் பின்வாங்கி வரும்படி உத்தரவு கொடுக்காததினால் அவர்கள் அங்கு தங்கியிருக்கலாம்.

ஹாலந்தில் உள்ள ஜெர்மானியர்கள் பின்வாங்குவதற்குக் காரணத்தைப்பற்றி எனக்குச் சந்தேகமில்லை. என்னுடைய அபிப்பிராயப்படி, பின்வாங்க உத்தரவிட்டதினால் அவர்கள் அவ்விதம் செய்யவில்லை. அவர்கள் எங்கு இருக்க மறுத்துவிட்டார்கள். இதற்கும் நல்ல காரணம் உண்டு.

சாதாரணமான ஜெர்மானியர் அதிக புத்தி கூர்மையுள்ளவர்களல்ல. ஆகையினால் தான் அவர்கள் அதிகாரத்துக்கு வந்த எவருக்கும் கீழ்படிந்து நடக்கிறார்கள். ஆகிலும் V குண்டுகளால வீடுகளை இழந்தவும் குடும்பங்களை இழந்தவும் ஆன மனிதர்கள் கையில் V குண்டுகளையே V அமைப்புகளுள்ள இடத்திலேயே அகப்பட்டுக்கொள்ள சாதாரணமான ஸோல்ஜரும் சிறிது ஆலோசித்துத்தான் பார்க்கவேண்டும்.

இதே சமயத்தில் கவசம் பூண்டபடைகள். விமானப்போக்குவரத்து உதவியுடன் முன்னேறி வருகின்றன. விசாலமான போர்முனையுள்ள 21-வது சேனை அவர்களைப் பின்பற்றிச் செல்லுகிறது. அவைகளுக்கு உதவியாக ஆண்ட்வர்ப்பிலிருந்து ஏராளமான சர்ப்பராக்களை ரைன் நதி பேரில் பெய்லி பாலங்கள் வழியாகக் கொண்டுவரும் வண்டிகள் வந்து கொண்டிருக்கின்றன. ஐரோப்பாவில் மூன்றாவது பெரிய துறைமுகமான ஆண்ட்வர்ப் சமீபத்தில் இருப்பதினால்தான் சேனைகளின் முன்னேற்றத்துக்கு அதிக சௌகரியம் ஏற்பட்டிருக்கிறது.

---

## ஸ்டாலின்கிராடைப்போல் தற்காப்பு இங்கு இல்லை.

**வில்பிரட் வாகன் தாமஸ்.**

**(பி. பி. ஸி. ஒலிபெருக்கு.)**

**நான் ஜெர்மனியின் மத்திய ஸ்தலத்திலிருந்து எழுதுகிறேன். ஏப்ரல் மாதம் 9-ம் தேதியன்று தவறுதலாக நாங்கள் ரஸ்தாவைவிட்டு விலகி நமது டாங்குப்படைகளுக்குப்**

14430.

பின்னால் உள்ள எயிபர்க் என்னும் நகருக்குள் சென்றோம். எங்களுடைய மோட்டார்கள் முதல் முதலாக அங்கு தங்கியதென்று கண்டோம்.

நாங்கள் வழியைப்பற்றிக் கேட்டோம் ஆனால் நகர வாசிகள் சரணடையத்தயாராக இருந்தார்கள், நாங்கள் அதை ஒப்புக்கொள்ளாததுகண்டு அவர்களுக்குக் கோபம் மூண்டது. ஒருவர் வெளியே வந்து ஒவ்வொரு வீட்டிலும் வெண்மைக் கொடி போட்டிருக்கிறோமென்று சொன்னார்.

ஒரு சிறு பெண் இரண்டு துப்பாக்கிகளையும் ஒரு சனியனையும் வைத்திருந்தாள். உண்மையான கொரில்லாப்போர் நடத்துகிறவரைக்கண்டோமென்று நினைத்தேன். ஆனால் அது அப்படி இல்லை. அப்பெண் எங்களை நிறுத்தி, துப்பாக்கிகளை மேயரிடம் எடுத்துச் செல்லுவதாகவும் அதை ஒருவரும் சுடப்போவதில்லை என்றும் சொன்னாள்.

மேயரிடமிருந்து தப்பிச்செல்லுவது கஷ்டமாகி விட்டது. அவர் எங்களுடைய உத்தரவை நிறைவேற்றத்தயாராக இருந்தார். இவர்களைப்பற்றி நாம் எவ்விதம் நினைப்பது. அவர்களுடைய சேனை, சிதறுண்டு போய்விட்டது, அனேகர்கள் சரண் புகுந்துவிட்டார்கள். ஆபீஸர்கள் முதுகு காட்டி ஓடிவிட்டார்கள். இந்த பொது மக்கள் நேசதேசத்தார்களை வரவேற்று அவர்களின் உத்திரவுப்படி கீழ்படிந்து நடக்கத்தயாராக இருக்கிறார்கள்.

ஜெர்மனியில் ஸ்டாலின்கிராட் போன்ற தற்காப்பு இல்லை. சரித்திரப் புகழ் பெறக்கூடிய தெர்மாபலி போன்ற போரும் கிடையாது. நாம் காணுவது இது தான் "ஒரு இரண்டாம் தரமான நாடகம் நடைபெறுகிறது. நாம் முன் வரிசையிலிருக்கிறோம், பிரியமில்லாத உள் நாட்டுப்படைகள் பாடிக்கொண்டிருக்கின்றன. அதன் டைரக்டரான ஹிட்லர், இந்த நாடகத்தின் சூத்ரதார், பெர்கஸ்காடனில் ஒளிந்து கொண்டிருக்கிறான்."

---

## பிரிடிஷ் மன்னர்கள் ஹனோவரில் ஆக்ஷிபுரிந்தார்கள்.

(விக்டர் ஷிப்.)

(டெயிலி ஹெரால்ட்).

விக்டோரியா மகாராணி ஆண் பிள்ளையாகப் பிறக்காதது மனிதவர்க்கத்திற்கே துர் பாக்கியம். அவ்விதமிருந்திருந்தால் உலகில் இரண்டு பெரிய யுத்தங்கள் நடந்திராது.

1837-ம் வருஷம் வரையில் 125 வருஷங்களாக, நமது முதாதையர்கள் காலத்தில் ஹனோவர் நமது மன்னர் ஆக்ஷிக்குட்பட்டுயிருந்தது. நான்காவது வில்லியம் இறந்து, ஆண் வார்ஸ் இல்லாமல் போனபொழுது ஹனோவர் வார்ஸ் கட்டாயப்படி விக்டோரியா மகாராணி அருகதையற்றவர் என்று சொல்லி விட்டார்கள். ஹனோவர் பிரிடிஷ் சாம்ராஜ்யத்திலிருந்திருந்தால் 30 வருஷங்களுக்குப்பின் பிஸ்மார்க் அதைத் தாக்கி அதை பிரஷ்யாவுடன் சேர்த்துக்கொண்டிருக்கமாட்டான்.

ஹனோவரில் தான் பிஸ்மார்க்குக்கு பலமான எதிர்ப்பு காணப்பட்டது. கெயிஸர் நாளிலிருந்த ஜெர்மன் ஜனப்பிரதிநிதி சபையில் ஹனோவர் தொகுதியிலிருந்து அநேக அங்கத்தினர்களுமிருந்தார்கள். வெல்பிஸ் என்பவர்கள் 50 வருஷங்களுக்குப்பின்னும் பாத்தியத்தை இழந்த வம்சத்துக்கு விசுவாசம் காட்டி வந்தார்கள். அவர்களின் கடைசி சந்ததியாரான பிரன்ஸ்விக், கம்பர்லாந்தின் பிரபுவான எர்னெஸ்ட் ஆகஸ்ட் கெயிஸரின் பெண்ணை மணம் செய்துகொண்டு அவருடன் சமாதானமாக இருந்து வந்தான்.

ஆகிலும் குடியரசுக்குள் சுதந்திர விருப்பமுள்ள அநேக இருந்து வந்தார்கள், அவர்கள் சித்தஸ்வாதீனமில்லாதவர்கள் என்று நினைக்கப்பட்டார்கள். இது 1929-ம் வருஷம் தேருதலில் புலப்பட்டது. இப்பொழுது ஹனோவருக்கு சுதந்திரம் பெற மற்றொரு அவகாசம் கிடைத்திருக்கிறது.

---

## ஹாலந்தை விடுவித்து ஜெர்மனியை ஆக்கிரமிப்பது.

### நேசதேசத்தார்களுக்கு இருவகைப்பட்ட லக்ஷியம்.

(லெப்டினெண்ட் ஜெனரல் ஸர் டக்ளஸ் ப்ரௌனிக்).

விட்டத்தைவிட அரை வட்டத்தின் சுற்றளவு நீளமானதென்பதை அறிய க்ஷேத்திர கணிதத்தைப்பற்றிய அறிவு அவசியமில்லை. ஒரு காகிதத்தில் அர்த்த சந்திரனை வரைந்தால் இந்த சாதாரணமான விஷயம் வெளியாகும். இதைக்கொண்டு மேற்குப் போர்முனையைக்

கவனித்தால் ரைன் நதியைத் தாண்டியபோது இருந்ததைவிட இப்போது நேசதேசப் படைகள் நீண்ட போர்முனையில் போரை நடத்துகின்றனவென்று அறியலாம்.

ரைன் நதிதான் விட்டம். நேசதேசப் படைகள் தற்பொழுது சுற்றளவுக்கோட்டில் இருப்பதாக வைத்துக்கொள்ளலாம். போர்முனை விஸ்தரிப்பும் நேசதேச முன்னேற்றத்தையும் நோக்கினால் எதிரியை நாம் நையப்புடைத்திருக்கும் நிலைமைக்கு தகுந்த அத்தாட்சி கிடைக்கும். போர்முனை விஸ்தரிக்கப்பட்டபோதிலும் ஜெர்மானியர்கள் ஒரு இடத்திலாவது பலமாக பதில் தாக்குதலை நடத்தமுடியவில்லை. மோடல் உள்பட ரூர் பகுதியில் அடைப்பட்டிருக்கும் 16 டிவிஷன் படைகள் அவர்களைச் சுற்றியுள்ள நேசதேசப்படை வரிசைகளை ஒரு இடத்திலும் ஊடுருவிச்செல்ல முடியவில்லை.

ரூர் பகுதியில் படைகளை வைத்து எதிரியின் ஸப்ளை திட்டத்தை வழிமறிக்க எதிரி உத்தேசித்திருக்கிறானா அல்லது நேசதேசப் படைகள் ரைன் நதியை துரிதமாகத் தாண்டி விட்டதனால் ரூரிலிருந்து வெளியேறுவதற்கு ஜெர்மானியர்களுக்கு போதுமான அவகாசம் கிடைக்கவில்லை என்றாவது இப்பொழுது சொல்வதற்கில்லை. ஆகிலும் ரூர்ப்பிரதேசம் ஜெர்மன் வசமிருப்பதனால் நேசதேச ஸப்ளை திட்டங்களுக்கு யாதொரு கெடுதலும் ஏற்படாது. ஏனெனில் நேசதேசத்தார்கள் ரைன் நதியின் குறுக்கே ஏராளமான பாலங்களைக் கட்டி முடித்திருக்கிறார்கள்.

தனிப்பட்ட கவசம் பூண்ட படைகளின் நடவடிக்கைகளையோ, அல்லது அவைகளுக்குப் பின்னால் வரும் முக்கிய சேனைகளுடைய நடவடிக்கைகளையோ, பின்பற்றிச் செல்லுவதில் ஒரு பிரயோஜனமும் இல்லை. ஜெர்மனியை ஆக்கிரமிப்பதும் ஹாலந்தை திரும்பி ஆக்கிரமிப்பதும்தான் நடைபெறுகின்றன. இவ்விதமாக எல்லா திசைகளிலும் விசிறி போல் பறவுவது ஜெர்மானியர்கள் தற்காப்புகளை காபந்து செய்து வந்திருந்தால் ராணுவ முறையில் இங்கிதக் குறைவானதாக இருந்திருக்கும். இவ்விதமாக நாம் அதிக அபாயமன்னியில் இரண்டு லக்ஷியங்களை ஓர் மூச்சில் அடைந்துவிட்டோம். ஹாலந்தை விடுவிப்பதுடன் ஜெர்மனியை ஆக்கிரமித்து வருகிறோம். இந்த இரண்டு லக்ஷியத்தை நாம் கையாண்டதிலிருந்து ராஜீய, மனிவர்க்கத்தினிடம் அனுதாபமுள்ள சிந்தனைகள் கேவலம் ராணுவ லக்ஷியத்தைவிட முக்கியத்வமுள்ளவைகள் என்று வெளிப்படுகின்றன. இதிலிருந்து அதிகார வர்க்கத்தார் ஜெர்மனி ராணுவ முறையில் புத்துயிர் பெறுவது அசாத்தியமானதென்று பூரணமாக நம்பியிருக்கிறார்கள். மற்றொரு முக்கியமான விஷயம் யாதெனில் மேற்குப் போர்முனையிலுள்ள நேசதேசத்தார்கள் வடக்கிலும் கிழக்கிலும் உறுதியுடன் முன்னேறி வருவதுதான். இது ஜெர்மன் சேனைகளின் எதிர்ப்பைவிட நமக்கு ஏற்பட்டிருக்கும் நிர்வாக சிரமங்களை நிவர்த்தி செய்வதைப் பொருத்ததாகும். நான்கு வருஷங்களாக வெடி குண்டுகளை வர்ஷித்த பிரதேசத்தின் பேரில், நேசதேசத்தார்கள் முன்னேறி வருகிறார்கள் என்பதை நாம் ஞாபகப்படுத்திக்கொண்டால், நமது படைகள் இருதரப்பாரும் பாழாக்கியிருக்கும் தேசங்களை தாண்டிச் செல்லுகின்றன என்று அறியலாம். வெடி குண்டு வீச்சினால் பழுதுபட்ட ரஸ்தாக்களும் இருப்புப்பாதைகளும் கால்வாய்களும் பூமராங்குகளைப்போல நேசதேசத்தார்களைத் தாக்க வந்துவிட்டன.

நேசதேச வெற்றிக்கு முக்கிய காரணங்களாக இருந்தவைகளில் ஜெர்மன் போக்குவரத்துகளையும், தொழிற்சாலைகளையும், வெடி குண்டுகள் அழித்தது முக்கியத்வம் இல்லாதது என்று நான் சொல்லவில்லை. இந்தத் தாக்குதலின் விளைவு என்ன என்று அறியாதவர்கள் இப்போது நமது படைகளுக்கு முன் நிற்கும் சிரமங்களைப் பார்த்து அவற்றை அறிந்து கொள்ளலாம்.

இரண்டாவது பிரிட்டிஷ் சேனை வடக்குக்கடல் துறைமுகங்களான எம்டன், பிரேமன், ஹாம்பர்க்கை அடைய முன்னேறி வருகிறது. இந்தத் துறைமுகங்கள் நமக்குக் கிடைத்துவிட்டால் நேசதேசப் படைகளுக்கு இடது பக்கத்தில் உள்ள ரஸ்தாக்களின் நெருக்கடி ஒருவாறு குறையும். ஆகிலும் ஷெல்ட் நதி முகத்துவாரத்தில் ஏற்பட்ட அனுபவத்திலிருந்து துறைமுகத்துக்குச் செல்லும் கப்பல்களின் கடல் மார்க்கம் சுத்தி செய்யப்படாவிடில் துறைமுகங்களை ஆக்கிரமிப்பது பிரயோஜனமற்றது என்று நாம் அறிவோம். ஒவ்வொரு திசையிலிருந்தும் எதிரியைச்சுற்றி பொறிகள் நெருங்கி வருகின்றன. ஒரே நாளில் கோனிக்ஸ்பர்க் விழுந்ததென்றும் வியன்னா ஆக்கிரமிக்கப்பட்டதென்றும் ஹாலந்திலுள்ள படைகள் துணிக்கப்பட்டன என்றும் செய்திகள் மற்ற சமயத்தில் வந்திருந்தால் ஜெர்மனிக்கு மகத்தான தீங்கு ஏற்பட்டிருக்கும்.

ஆனால் இன்று அந்தத்தகவல்கள் ஒன்றன் பின் ஒன்றாக நடைபெற்ற தோல்விகளைக் குறித்தவைகள். ஐரோப்பிய தகவல்களைக் கண்டு ஜப்பானில் எவ்விதக் குழப்பம் ஏற்படுகிறதென்று யோசித்துப்பாருங்கள்.

# கிரிப்ஸ் தொழிற்சாலை நிர்மூலமாக்கப்பட்டது,

## எஸ்ஸன்—நொருங்கிக்கிடக்கிறது.

(டெயிலி ஸ்கெச்).

எஸ்ஸனிலுள்ள கட்டடங்கள் தூளாகி புகைபோல தூசிகள் ஆகாயமளாவி இருக்கின்றன.

ஆல்பிரட் கிரப்பின் மகத்தான வெண்கலச்சிலை பிரிடிஷ் வெடிகுண்டுகளால் நொருக்கப்பட்டு கொஞ்ச தூரத்திலுள்ள தண்ணீர் நிறம்பிய வெடிகுண்டுகளால் ஏற்பட்ட குழியில் கிடக்கிறது. ஜெர்மன் யுத்த தளவாட தொழிற்சாலை அழிந்ததென்று அது சூசிப்பிக்கிறது. கண்ணைட்டும் வரையில் எங்கு பார்த்தாலும் அழிவு காணப்படுகிறது. மைல்கள் கணக்காக தொழிற்சாலைக் கட்டடங்களும், டாங்குகளைக் கட்டும் சாலைகளும், பீரங்கிசாலைகளும், ரயில்வே என்ஜின் உற்பத்திசாலைகளும், ஜெர்மன் யுத்த தளவாட உற்பத்திசாலைகள் எல்லாம் நொருக்கப்பட்டு, உருக்குலைந்து கிடக்கின்றன.

தூசிக்கு மத்தியில் சில புகைப்போக்கிகள் சமாதிக் கல்லுகளைப்போல் காணப்படுகின்றன. ஆயிரக்கணக்கான ஜெர்மானியர்களும், அடிமை வேலைக்காரர்களுமிருந்த தொழிற்சாலைகளிருந்து, எரிமலையிலிருந்து குழம்பு வெளிப்படுவதுபோல ரஸ்தாக்களில் குழம்புகள் கட்டி கட்டியாக விழுகின்றன. இதுதான் சுண்டுவீச்சின் உச்சநிலை. ஜெர்மன் யுத்த முயற்சியைக் குலைத்த பிரிடிஷ் விமானப்படைக்கு பாராட்டு அளிக்கக்கூடியது.

நான் கிரப்ஸ தொழிலாளர்களின் மானேஜருடன பாழாய்ப்போன கொட்டகைகள் மூலம் சென்றபொழுது அவர் பின்வருமாறு சொன்னார்:—"உங்களுடைய வெடி விமானங்கள் 100 தொழிற்சாலைகளில் ஒவ்வொன்றையும் அழித்துவிட்டன. 1944-ம் வருஷம் அக்டோபர் மாதத்தில் நாங்கள ஒன்றுபட்ட தொழிற் பிரதேசமாக இருக்கவில்லை. சென்ற மார்ச்சு மாதத்தில் நாங்கள் பூராவாக அழிக்கப்பட்டுவிட்டோம்.

---

# V-ஆயுதங்களை செய்யவில்லை என்று க்ரப்ஸ் சொல்லுகிறார்.

## யுத்த தளவாட உற்பத்தி பிரமுகரின் பீதி.

ஜேம்ஸ் வல்லார்ட்.

(டெயிலி எக்ஸ்பிரஸ்).

37 வருஷங்களாக பிரஸிடெண்டாகவுள்ளவும் பாழாக்கப்பட்ட க்ரப்ஸ் தொழிற்சாலை சாம்ராஜ்யத்தின் தனிப்பட்ட சொந்தக்காரருமான ஆல்பிரெட் க்ரப்ஸை ஒரு மணி நேரம் பிரச்னம் செய்தார்கள். கேள்வி சிக்கலாக இருந்தபொழுது அவர் பரபரப்புடன் உதடுகளைக் கடித்துக்கொண்டும் பதிலை சுற்றி வளைத்தும் சொல்லிவந்தார்.

எஸ்ஸெனில் ஒரு சிறிய அறையில் கள்ளிப் பலகை மேஜைக்கு அருகில் அவர் உட்கார்ந்திருந்தார், நாங்கள் நுழைந்தபொழுது அவர் எழுந்திருந்தார்.

உயரமாயும் அழகாயும் வெளுத்த சுத்தமான முகமும், நீல வர்ணமுள்ள கண்களும் நன்றாக அமைக்கப்பட்ட சாம்பல் வர்ணமுள்ள ஆடையும், நீலக் கோடுகள் உள்ள பட்டியும் மேல் அங்கியும் அழுத்தமான நீல வர்ணமுள்ள டையும் அணிந்திருந்த ஒருவரைப் பார்த்தேன்.

நாங்கள் கைலாக்குக் கொடுக்கவில்லை. நாங்கள் உட்கார்ந்தபொழுது 160 மிலியன் மார்க்குகள் பொருமானமுள்ள தொழிற்சாலைகளின் பிரபுவான கிரப்ஸ் எங்களை வெறுக்கிறவர் போல் காணப்பட்டார். ஆனால் அவர் நிச்சயமாய் பீதி அடைந்திருந்தார் என்று தெரிய வருகிறது. அவர் ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன் பாஷைகளை மாற்றி மாற்றி பேச ஆரம்பித்தார்.

அவருடைய அறைக்கு வெளிப்பக்கத்தில் நமது பீரங்கிகள், சுட ஆரம்பித்தபோது நிம்மதி அடைய சுருட்டைப் பிடிக்கலாமா என்று அவர் கேட்டார். நான் அனுமதித்தேன்.

கேள்வி: நீங்கள் நாஸிக்கட்சியைச் சேர்ந்தவரா?

விடை: ஆம்.

கேள்வி: ஹிட்லரும் ஹிம்லரும் கோயபல்ஸும் மற்ற நாஸித் தலைவர்களும் எங்கு இருக்கிறார்கள் என்று உங்களுக்குத் தெரியவருமா?

விடை: அவர்கள் பர்லினிலாவது அல்லது பர்கஸ்காடனிலாவது இருப்பார்கள்.

கேள்வி : நீர் நாஸித்தலைவர்களுக்கு பிராண ஸ்நேகிதனா?

விடை : நான் வியாபார ஸ்நேகிதன் அல்லது பந்து.

கேள்வி : பியூரரை நீங்கள் எப்பொழுது கடைசியாகக் கண்டீர்?

விடை : மூன்று வருஷங்களுக்குமுன் கோயபல்ஸ்:இங்கு மூன்று மாதங்களுக்கு முன் வந்தார்.

கேள்வி : நேசதேச வெடிகுண்டு வீச்சின் பயனை கிரப்ஸ் முதன் முதலில் எப்பொழுது அனுபவித்தது?

விடை : 1942-ல்.

கேள்வி : இரவு பகல் தாக்குதலின் அனுபவம் எப்பொழுது ஏற்பட்டது?

விடை : 1943-ல், இன்னும் அதிகமாக 1944-ல், 1944-ம் வருஷ முடிவில் நாங்கள் உற்பத்தியை 30 சத விகிதம் தான் செய்ய முடிந்தது. டாங்கி டிரக்குகளுக்கு முகான்மை அளித்து வந்தோம். 1945-ம் வருஷத்தில் உற்பத்தி வரவரக் குறைந்தது. மார்ச்சு 11-ம் தேதி தாக்குதலுக்குப் பின் உற்பத்தி நின்றுபோய்விட்டது.

கேள்வி : உலகப் பிரசித்திபெற்ற இந்தத் தொழிற்சாலையின் உண்மையான ஸ்வான்தார் யார்?

விடை : ஆஸ்திரியாவில் வசிக்கும் என்னுடைய தாயார். இப்பொழுது அவள் சர்வ பாத்தியத்தையும் எனக்குக் கொடுத்துவிட்டாள்.

கேள்வி : சென்ற ஐந்து வருஷங்களாக உங்களுக்கு என்ன லாபம் கிடைத்தது?

விடை : வரிபோக 6 சதவிகிதம்.

கேள்வி : உன்னுடைய தொழிற்சாலைகளும் சுரங்கங்களும் மற்ற ஸ்தாபனங்களும் எவ்வளவு பரப்பில் இருக்கின்றன?

விடை : என்னால் சொல்லமுடியாது. சென்ற 10 வருஷங்களாக ஜெர்மன் கடற்படைக்கு நான் ஏழாயிரம் பீரங்கிகளையும் எண்ணிக்கையற்ற மற்ற பீரங்கிகளையும் முக்கியமாக கியாதி பெற்ற ஜெர்மன் 88 பீரங்கிகளையும் டாங்கிகளையும் யூ படகுகள் உள்பட சகல ரகக் கப்பல்களையும் உற்பத்தி செய்து கொடுத்திருக்கிறேன்.

கேள்வி : V ஆயுதங்களையோ அதன் பாகங்களையோ நீர் செய்துகொடுத்திருக்கிறீரா?

விடை : இல்லை.

கேள்வி : உம்மிடம் எவ்வளவு தொழிலாளர்கள் வேலைசெய்து வருகிறார்கள்?

விடை : அது வேறுபட்டது. 1943-ல் 1,16,000. அவர்களில் 50,000 அயல் நாட்டு வேலைக்காரர்கள்.

கேள்வி : அயல்நாட்டு வேலைக்காரர்களை எவ்விதம் பெற்றாய்?

விடை : நிர்வாகம் அவர்களை அனுப்பியது.

கேள்வி : அயல்நாட்டு வேலைக்காரர்களுக்கு ஊதியம் கொடுக்கப்பட்டதா?

விடை : அது சில விஷயங்களைப் பொருத்தது.

கேள்வி : என்ன விஷயங்கள்?

விடை : தனிப்பட்ட வேலைக்காரர்களென்றும் மற்றவர்களென்றும் இருவகைப்பட்ட அயல்நாட்டு வேலைக்காரர்கள் உண்டு.

கேள்வி : இந்த அயல்நாட்டு வேலைக்காரர்களுக்கு சம்பளம் உண்டா? அப்படியானால் எவ்வளவு.

விடை : கிரப்ஸ் ஜெர்மன் தொழிலாளர்களைப்பற்றி பேச ஆரம்பித்தார். என்னுடைய கேள்விக்கு பதில் சொல்லவில்லை என்று நான் ஞாபகப்படுத்தினேன். இறுதியில் தனிப்பட்ட அயல் நாட்டு வேலைக்காரர்களென்பது ஜெர்மனியில் வேலை செய்ய தானாக வந்தவர்களென்றும் அவர்களுக்கு தினசரி 6 மார்க் சம்பளமும், குடும்பங்களில் ஒரு இடத்தில் இட வசதியும் அளிக்கப்பட்டதென்று நான் அறிந்து கொண்டேன். மற்ற அயல்நாட்டு அடிமை வேலைக்காரர்களான 20,000 பேர்கள் படை முகாம்களில் வசித்துவந்தார்கள். அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 30 மார்க் சம்பளம் கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால் அந்தத் தொகை பூராவும் வாழ்க்கைச் செலவுக்கு சரிக்கட்டிக்கொள்ளப்பட்டது.

கேள்வி : ஜெர்மனியின் எதிர்கால தொழில் முறை எவ்விதம்?

விடை : யுத்தம் நடந்துகொண்டிருக்கும்போது நான் அதற்குப் பதில் உரைக்க முடியாது.

கேள்வி: கிரப்ஸின் எதிர்கால நிலைமையைப்பற்றி உங்களுடைய சொந்த அபிப்பிராயமென்ன?

இந்தக் கேள்வியில் கிரப்ஸுக்கு திருப்தி ஏற்பட்டது. அவர் பதில் சொன்னார். கிரப்ஸ் ஒர்க்ஸின் தலைவரான நான் மூன்று சந்ததியாக என் குடும்பத்தாருக்காக உழைத்திருக்கும் தொழிலாளர்களுக்கு வேலை கண்டுபிடிக்கவேண்டும் என்று நம்புகிறேன்.

கேள்வி: உம்முடைய தொழிற்சாலையில் எவ்விதபொருளை உற்பத்தி செய்யலாமென்று எதிர்பார்க்கிறாய?

விடை: அது வியாபார ஸ்தலத்தைப் பொருத்தது.

---

## வியன்னா—பாடல் பெற்ற நகரம்.

### ஹிட்லருக்கு துக்ககரமான ஞாபகங்கள்.

*வில்லி பிரிஷாயிர்—டெயிலி ஹெரால்ட் பத்திரிகை.*

வியன்னாவைப்பற்றிய அநேக விஷயங்கள் பாட்டுகளில் காணப்படுகின்றன. இதைப்போல் எந்த நகரமும் வரையறுப்பில்லாத கௌரவத்துடனும், பெருமையுடனும், உணர்ச்சியுடனும், தற்புகழ்ச்சி செய்துகொண்டதில்லை. இதைப்போல் சரித்திரத்தைப்பற்றியும், பூகோளத்தைப்பற்றியும், கீதமும் கதையும் மாயையும் உள்ள விவரங்களை எந்த நகரமும் வெளியிட்டதில்லை. ஆகிலும் இரண்டு மிலியன் ஜனங்களுள்ள இந்த நகரின் புகழ் 30-வருஷங்களுக்குமுன்பு மறைந்துவிட்டது.

வியன்னா ஹிட்லருக்கு எப்பொழுதும் துக்ககரமான சம்பவங்களை ஞாபகப்படுத்தக் கூடியது. இப்பொழுது அது அதிகரித்துவிடும். வியன்னாவில்தான் ஹிட்லர் யூதர்களை எதிர்க்கும் கொள்கையைக் கற்றுக்கொண்டார். அவர் கலையைத்தான் கற்றுக்கொள்ளவில்லை. அவருடைய புஸ்தகங்களை எவரும் குப்பை என்று நினைத்து வியன்னா சர்வகலாசாலை அவரை மாணவராக ஏற்க மறுத்தது. அதுமுதல் ஹிட்லருக்கு வியன்னாபேரில் அருவருப்பு உண்டு. வெற்றிக்கொண்டாட்டத்திற்காக டாங்குகள் சரியான காலத்தில் வராததால் அவர் 1938-ம் வருஷம் படையெடுப்புக்குப்பின் வியன்னாவை விட்டுச்சென்றார். ஆனால் கோயரிங்குக்கு வியன்னாபேரில் அபிமானம் உண்டு. அதன் ஆகாரங்களையும் காபியையும் வியன்னா ஜனங்கள் காலை போஜனத்திற்கு உள்கொள்ளும் பிராங்க்பர்ட்டர்களையும் அவர் நேசித்தார்.

வியன்னா ஜனங்கள் ஜோ ஹான்ஸ்ட்ராஸை நேசித்தார்கள். பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் அவருடைய கீதங்களைப் பாடுவார்கள். பானில் பிறந்து வியன்னாவில் உத்ஸாகம் பெற்று ஏராய்காவை எழுதிய பித்தோவனையும் அவர்கள் ஆராதிக்கிறார்கள். மாதாகோவில் கலையும் அவர்கள் நேசிக்கிறார்கள்.

வியன்னாவில் லண்டனின் டௌனிங் தெருவும் பாரிஸ்குவேடி ஆர்ஸேயும் ஒன்றுபட்ட பால்ஹாஸ்ப்ளாட்ஸ் என்ற தெருவு இருக்கிறது. அங்குதான் பர்ச்டோல்டு பிரபு சென்ற யுத்தத்திற்கு திட்டம் போட்டார். அங்குதான் நாசிகள் டால்பஸை கொன்றார்கள்.

ஆனால் அநேக எண்ணங்கள் சூழ்ந்த டான்யூப் நதி நீலமாக இல்லை. அது வியன்னா வழியாகச் செல்லவில்லை. வியன்னா வழியாகச் செல்வது டான்யூப் கால்வாயும் வீன் என்ற சிறிய நதியும்தான்.

ஹாப்ஸ்பர்க் வியன்னாவும் ஹிட்லர் வியன்னாவும் மறைந்துவிட்டன. பாக்கி இருப்பது என்ன? தென்கிழக்கு ஐரோப்பாவிற்கு மிகவும் முக்கியமான போக்குவரத்து மார்க்கங்களின் மத்ய நிலையமும் மேற்கு, கிழக்கு நாகரீகங்களுக்கு தொடர்பு ஏற்படுத்துவதுமான வியன்னா இருக்கிறது. ஆகிலும் அங்குள்ள நான்கு முக்கியமான ரயில்வே ஸ்டேஷன்கள் பாழாகிவிட்டன. மேலும் பெரிய உள்நாட்டுத் துறைமுகமுள்ள டான்யூப் நதிக்கரையிலுள்ள வியன்னா பாக்கியிருக்கிறது. நெசவு, மரசாமான், தோல் சாமான்கள், போர்ஸ்லேன், விநோதங்கள, பொம்மைகள் முதலியவற்றில் அபிருசியுள்ள நகரமான வியன்னாவும், சிலாக்கியமான நாடகமேடையும், நர்த்தனசாலையும் உள்ள வியன்னாவும், வைத்ய ஆத்மஞான கல்விநிலையத்தைச்சேர்ந்த மேதாவிகளும், கல்விப் பயிற்சிபெற்ற நியாயவாதிகளும் உள்ள வியன்னா பாக்கியிருக்கிறது.

கடைசியாக ஏராளமான தொழிற்சாலைகளுள்ள வியன்னாவும் இருக்கிறது. அங்குதான் தொழிலாளர்கள் அடிக்கடி ஜனநாயகத்தில் அவர்களுக்குள்ள நம்பிக்கையை அடிக்கடி உறுதி கூறினார்கள். பட்டினிகிடந்து கலகம் செய்தார்கள். ஒரு வருஷத்தில் இரண்டு தடவை முற்றுகைக்குள்ளிருந்து சண்டைபோட்டு தோல்விபெற்றார்கள். இப்போது அவர்கள் விடுதலை அடைந்துவிட்டார்கள்.

# எட்டாவது சேனைக்கு மற்றொரு D தினம்.

## சீனியோ நதியைத் தாண்டுவது.

### காட்பிரே டால்பட்

(பி. பி. ஸி. பிரசங்கம்).

ஏப்ரல்மீ 9வ அன்று ஜெனரல் மாக்ரியாரியின் ஸோல்ஜர்கள் ஆட்ரியாடிக் பகுதியில் தாக்குதலைத் துவக்கினார்கள். மகத்தான இடைஞ்சலான ஸீனியோ நதியை அவர்கள் விசால மான பிரதேசத்தில் தாண்டிவிட்டார்கள். இப்போர் முனையில் ஏற்பட்டிருந்த ஒரு மாத கால அயர்வு ஓய்ந்தது. நமது தேர்ச்சி பெற்ற வீரர்கள் மறுபடியும் போரைத்துவக்கி விட்டார்கள். மகத்தான எமலியன் சமவெளியில் தூசியிலும் புகையிலும் போர் நடை பெறுகிறது.

தாக்குதலுக்கு முன் ஆகாயத்திலிருந்து குண்டு வீச்சு ஏற்பட்டது. பகல் காலத்தில் நூற்றுக்கணக்கான நேசதேச விமானங்களும் கனமான வெடி விமானங்களும் நடுத்தரமான வெடி விமானங்களும், சண்டை வெடி விமானங்களும், சண்டை விமானங்களும் நமது படை வரிசைகளுக்கு முன்னாலுள்ள நீண்ட பிரதேசத்திலுள்ள ஜெர்மன் ஸ்தானங்களில் வெடி குண்டுகளை வீசின. போர் முனை பூராவிலும் தூசியும் புகையும் வெடி குண்டுகளின் சிவந்த நெருப்பும் காணப்படுகின்றன. இந்த விமான நடவடிக்கையை ஒரு வருடத்துக்கு முன் காஸினோவில் நடைபெற்ற தாக்குதலுக்கு ஒப்பிடலாம். அந்த நதிக்கோட்டிலுள்ள சுரங்க வெடிகளுக்கு பின்னாலுள்ள ஜெர்மானியர்களை வெடி குண்டுகளும், பீரங்கிகளும், நெருப்பு களும் அழித்து வந்தன.

அநேக மாதங்களாக வெள்ளப்பெருக்குள்ள சீனியோ நதியும் அதில் நிலைபெற்றிருந்த உறுதியுள்ள ஜெர்மானியர்களும் நேசதேசத் துருப்புகளுக்கு முன்னால் இடையூராக இருந்தன. இப்போது நாம் அதைத்தாண்டிவிட்டதால் தட்டையான பசுமையான சம வெளியில் இப்பொழுது போர் புரிகிறோம். அந்த சம வெளியில் நதிகளும் கால்வாய்களும் அணைகளும் திராக்ஷை வனங்களும் சிவந்த வெண்மையான இத்தாலிய பண்ணை வீடுகளும் இருக்கின்றன.

இவ்விதமாக ஆபிரிக்காவில் போர் புரிந்த சேனை ஐரோப்பியப்போரில் இறுதிப்போரை மறுபடியும் துவக்கிவிட்டது. இரண்டரை வருடங்களுக்குமுன் எகிப்தில் எல்அலாமீனில் போரைத்துவக்கிய சேனை அமைப்பிற்கும் இந்த சேனைக்கும் விசேஷ மாறுதல்களுண்டு. ஆனால் அதன் கம்பீரமான உயர்வான உத்ஸாகமும் குறைவுபடவில்லை.

எட்டாம் படைக்கு மற்றொரு தருணம் கிடைத்து விட்டது. இந்தப் படைகள் தாய் நாட்டிலிருந்து வெகு தூரத்தில் மூன்று அல்லது நான்கு வருடங்கள் போரை நடத்தி இருக்கிறார்கள். அவர்களுக்கு ஒன்று அல்ல அநேக D தினங்கள் கிடைத்தன. அதாவது ஆபிரிக்கா, ஸிஸிலி, ஸாலர்னோ, ஆன்ஷியோ. கடைசியாக சிரம சாத்தியமான பிரதேசத்தில் சீனியோ நதி என்ன நேரிட்டாலும் அவர்கள் 30 அடி நீளமும் 4 அடி ஆழமுமுள்ள சுரங்க வெடிகளுள்ள தண்ணீரும் 60 அடி உயரமுள்ள கரைகளுமுள்ள நதியைத் தாண்டி போரைத் துவக்கிவிட்டார்கள்.

இந்த அரணை உறுதியுடனும் ஜெர்மானியர்கள் தற்காப்பு செய்வார்கள். மேற்குப் போர் முனையில் அவருடைய சகாக்களுக்கு என்ன நேர்ந்தாலும், இங்குள்ள ஜெர்மானியர்கள் நன்றாக நிலைத்து நிற்கிறார்கள். என்ன சம்பவிக்குமென்று என்னால் ஊகித்துச் சொல்ல முடியாது. ஆகிலும் இதாலியில் வெள்ளப்பெருக்குள்ள இடங்களும் நதிகளும் தற்காப்பு செய்வதற்கு வேண்டிய அநேக சௌகரியங்களும் உள்ள இந்த சமவெளிக்குப் பின்னால் அநேக சிறந்த தற்காப்புகள் ஜெர்மனியார்களுக்கு இருக்கின்றனவென்று நமக்கு வெகு நாளாகத் தெரியும்.

---

# ஜெர்மனியின் அடிமை வேலைக்காரர்களுக்கு சுதந்திரம்.

## நேசதேசத்தார்கள் பிரச்னையைத் தீர்க்கும் விதம்.

(ரோனு சர்ச்சில்).

நேசதேசப் படைகள் ஜெர்மனி பேரில் முன்னேறி வரும்பொழுது அநேக பிரச்னைகள் தோன்றுகின்றன. ஒரு பிரதேசத்தில் மட்டும் 36,000 பிரச்னைகள் தோனறு கின்றன. இவையெல்லாம் ராணுவ அதிகாரிகளுக்கு மிகுதியான சங்கடத்தை உண்டு பண்ணுகின்றன.

இந்த பிரச்னை ஒவ்வொன்றுக்கும் D. P. (நாட்டை விட்டுச் சென்றவன்) என்று பெயர். அதாவது, தன்னிச்சையாகவோ அல்லது கட்டாயத்தின் பேரிலோ ஹிட்லருக்காக வேலை செய்ய வந்த பிரெஞ்சுக்காரர்கள், பெல்ஜியர்கள் போலந்து ஜனங்கள், டச்சுக்காரர்கள், நார்வீஜியர்கள், அல்லது ருஷ்யர்கள் என்று பொருள்படும். அப்பேர்ப்பட்டவர்கள் 8 மிலியன் ஜனங்கள் இருக்கிறார்கள்.

டெயிலி மெயில் பத்திரிகையில் ரோனு சர்ச்சில் எழுதியுள்ள இந்தக் கட்டுரையில் ஜெர்மனியின் வீழ்ச்சியினால் ஏற்பட்ட அநேக பிரச்னைகளில் ஒன்றான இது எவ்விதம் நேசதேசத்தாரால் தீர்க்கப்படுகிறதென்று சொல்லப்படுகிறது.

புத்தகங்களில் அவர்களை நாட்டைவிட்டு அகற்றப்பட்டவர்களென்று கூறி தாயகம் திரும்ப பிரியப்படும் ஜெர்மானியரல்லாத மற்ற தேசத்தைச் சேர்ந்த ஆடவர்களும் ஸ்திரீகளும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ராணுவ நிர்வாக உத்தியோகஸ்தர்கள் அவர்களை D. Ps. என்று சொல்லுகிறார்கள்.

ஜெர்மன் நகரத்தில் ராணுவ நிர்வாகம் அமைக்கப்பட்ட ஐந்து நிமிஷத்திற்குள் முதலாவது D P. அங்கு வந்துவிடுவார். அரை மணிக்குள் அவர்கள் மார்க்கங்களிலும் தாழ்வரைகளிலும் கூடிவிடுவார்கள். அவர்கள் அவசரப்படுகிறவர்களாகவும், பிடிவாதக்காரர்களாகவும் காணப்படுகிறார்கள். ஏழையென்றும், துன்புறுத்தப்பட்டவர்களென்றும், சனியன்களைக் காட்டி ஜெர்மனிக்காக யுத்தத் தொழிற்சாலைகளில் வேலை செய்ய கட்டாயப்படுத்தப்பட்டவர்கள் என்றும் சொல்லிக்கொள்ளுகிறார்கள். உண்மையில் அநேக பிரெஞ்சு, பெல்ஜிய, டச்சுக்காரர்கள் யாதொரு கட்டாயத்தின் பேரிலும் அங்கு வரவில்லை. ஆனால் ஜெர்மனியில் நல்ல ஊதியமும், நல்ல ஆகாரமும் கொடுக்கப்படுமென்று ஆசை காணப்பட்டது. ஜெர்மனி யுத்தத்தில் வெற்றி பெரும் என்று அவர்கள் நம்பியிருந்தார்கள்.

நாங்கள் அவர்களை மோட்டார் வாஹனங்களில் ஏற்றிச் சென்று முகாம்களில் அவர்களுக்கு ஆகாரம் கொடுக்கிறோம், பிரச்னம் பண்ணுகிறோம், அதன் பின் அந்தந்த நாட்டுக்கு அவர் அவர்களைத் திரும்பி அனுப்பும் உத்தியோகஸ்தர்களிடம் ஒப்படைத்து விடுகிறோம். அமெரிக்க 9-வது சேனையைச் சேர்ந்த ராணுவ நிர்வாகம் கவனித்து வரும் 36 000 D. P. களில் பாதிபாகம் உள்ள ருஷ்யர்களையும் போலீஷ் ஜனங்களையும் தவிர மற்ற எல்லோரையும் இவ்விதமாக காப்பாற்றுகிறோம்.

ருஷ்யர்களும், போல்களும் தான் பெரிய பிரச்னை. ருஷ்யர்களை ஏற்றுக்கொள்ள ருஷ்யா ஸியாஸான் ஆபீஸர்களை அனுப்பவில்லை. போல்களுக்கு நிரந்தரமான வாசஸ்தலமல்லாததால் அவர்களை எங்கு அனுப்புவதென்று புரியவில்லை.

அவர்களும் ருஷ்யர்களும் தான் காப்பாற்றப்படவேண்டிய D. Ps. ஏனென்றால் அவர்கள் கட்டாயத்தின் பேரில் ஜெர்மனிக்குக் கொண்டு வரப்பட்டவர்கள். ஒருவரும் தானாக வரவில்லை. ஜெர்மனியில் அவர்கள் அநேக கஷ்டங்களுக்கு உள்ளாகியிருக்கிறார்கள். அவர்களுக்கு ஜெர்மனியிடம் அதிக அருவருப்பு உண்டு. அவர்களிடம் ஒரு ஜவேஜியும் இல்லை. அவர்களின் சொத்துக்கள் ஒரு சிறிய பையில் இருக்கின்றன. அநேகர்கள் நோய்வாய்ப்பட்டிருக்கிறார்கள். ருஷ்யர்களில் 180 பேருக்கு டைபஸ் ஜுரம் இருக்கிறது. அவர்கள் முகாமுக்கு வந்தவுடன் அவர்களுக்கு நோய் பரவுவதைத் தடுக்கும் தூள்கள் உபயோகித்து சிகிச்சை செய்யப்படுகிறது.

ஜெர்மானியர்களை அடக்கியாளும் முக்கியமான அலுவலுள்ள ராணுவ நிர்வாகம், வீடில்லாத ருஷ்யர்களுக்கும் போல்களுக்கும் பேருதவி செய்து வருகிறது. அவர்களின் கஷ்டங்களை நீக்க கூடிய சௌகரியங்கள் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு நகரத்திலும் அவர்களுக்கு இடவசதியும் உணவுப் பொருளும் முதன்மையாக அளிக்கப்படுகிறது. வீடில்லாத ருஷ்யர்களும் ஜெர்மானிர்களும் வீட்டிற்காக போட்டி போட்டால் ராணுவ நிர்வாகம் வீட்டை ருஷ்யர்களுக்குக் கொடுத்துவிடுகிறது. உணவுப் பொருள் குறைவாக இருந்தால் ருஷ்யர்களுக்கும் போல்களுக்கும் முதலில் ஆகாரம் வழங்கப்படுகிறது. மிஞ்சியது தான் ஜெர்மானியர்களுக்கு. மஞ்சன் கிளாட்பாக்கிலும், கிரேப்பல்டிலும் அநேகம் தெருக்களிலிருந்து ஜெர்மானியர்கள் அப்புறப்படுத்தப்பட்டு, ருஷ்யர்கள், போல்களுக்கு விடப்படுகிறது. பொதுவாக சமீபத்தில் சிற்றுண்டி சாலைகள் அமைக்கப்பட்டு அங்கு தினசரி மூன்று போஜனங்கள் இலவசமாகக் கொடுக்கப்படுகின்றன. அவர்கள் வீடுகளுக்கு வாடகை கொடுப்பதில்லை. அவர்களுக்கு ஒரு மணிக்கு 65 பீபெனிங்குள் கொடுக்கப்படுகின்றன. அவர்களுக்கு ஒரு செலவும் கிடையாது. அவர்கள் ஒன்றும் வாங்கவேண்டியதில்லை. ஆனால் சில சமயங்களில் சேனையுடன் மத்தியான போஜனம் சாப்பிடும் பொழுது 50 பீபெனிங்குகளை அவர்கள் செலவிடவேண்டும்.

நேசதேசத்தைச் சேர்ந்தவர்கள் வேலை செய்யவேண்டும். அவர்கள் இதைச் செய்ய பிரியப்படுகிறார்கள். அவர்களுக்கு, வீட்டு வேலைக்காரர்களாகவும் சமையல்காரர்களாகவும், ஆடைவெளுக்கிறவர்களாகவும், ரஸ்தா சீர்படுத்துகிறவர்களாகவும், பாலம் கட்டுகிறவர்களாகவும், ஆபீஸ் வேலைக்காரர்களாகவும் அலுவல்கள் கொடுக்கப்படுகின்றன. அநேகர்கள் ராணுவ ஸ்தபானங்களில் வேலை செய்து வருகிறார்கள்.

மற்ற ருஷ்யர்களும், போல்களும் மேற்கு ஜெர்மனியிலுள்ள ஜன நெருக்கம் குறைவான இடங்களுக்குக் கொண்டு போகப்பட்டு அங்கு முகாம்களில் வசிக்கும்படி செய்யப்படுகிறார்கள். திடீரென்று துன்பத்திலிருந்தும் அடிமைத்தனத்திலிருந்தும் விடுபட்ட அவர்கள் தலைகொழுத்துப் போய் அவர்களுக்கும் ஜெர்மானியர்களுக்கும் அபாயத்தை உண்டுபண்ணினார்கள். அவர்கள் சிறு பான்மையோர் தான்.

இவர்களுக்கும், பெல்ஜியம், ஹாலந்து, பிரான்ஸைச் சேர்ந்த அடிமை வேலைக்காரர்களுக்கும் எதிரி சம்பந்தமான அபிப்பிராயத்தில் வேற்றுமை அதிகமாக இருக்கிறது. அநேகமாக ஜெர்மனியிலுள்ள டச்சுத் தொழிலாளர்களின் 10 சத விகிதம் தான் நாட்டை விட்டு வரும்படி கட்டாயப்படுத்தப்பட்டார்கள். பெல்ஜியத்தில் இது அதிகமானது. ஆகிலும் அநேக பெல்ஜியர்கள் ஜெர்மானியர்களுடன் ஒத்து வாழ்ந்து வந்தார்கள்.

அடிமைகள் தாயகம் திரும்புவதைக் கண்டு அநேக ஜெர்மானியர்கள் வீட்டுவாசற்படியில் நின்று விம்மி அழுகிறார்கள். அந்த ஆடவர்களும் ஸ்திரீகளும் தாங்கள் தன்னிச்சையாக ஜெர்மனிக்கு வரவில்லை என்று ராணுவ நிர்வாகத்தினிடம் சொல்லி வருகிறார்கள். நாங்கள் அவர்களுடன் விவாதம் செய்வதில்லை.

ஜெர்மன் ஸோல்ஜர்கள் வேஷம் போட்டு வராதபடி தான் நாங்கள் பார்த்துக்கொள்ள வேண்டும். ஒரு D. P. நிலையத்தில் 3,000 பேர்களில் 28 ஜெர்மன் ஸோல்ஜர்கள் பொதுஜன உடைகளை அணிந்து டச்சுகாரர்கள், பெல்ஜியர்கள் போல் பாசாங்கு செய்தார்கள். அவர்கள் ஜெர்மனிக்குள் ஏன் வந்தார்கள் என்பதைப் பற்றி அந்தந்த நாட்டு போலீஸ் விசாரணை செய்து வருகிறார்கள். நமது மோட்டார்கள் அவர்களை ஹாலந்துக்கும் பெல்ஜியத்துக்கும் கொண்டு போய் அங்கு ஒப்படைத்து விடுகிறது. அத்துடன் நமது சிரமம் முடிந்தது.

பிரெஞ்சு நிர்வாகம் பிரெஞ்சுக்காரர்களைத் திரட்ட லீஜுக்கு ரெயில் வண்டிகளை அனுப்புகிறது. டச்சுக்காரர்களும், பெல்ஜியர்களும் முகாம்களில் வெவ்வேறாகப் பாகுபாடு செய்யப்படுகிறார்கள். அவர்களை வரவேற்க கொடிகள் போடப்படுவதில்லை. அவர்கள் ருஜுச் செய்து கொண்டாலொழிய அவர்களை வெகு நாட்களாக இழக்கப்பட்டவர்களென்று கருதுவதில்லை. அந்தந்த நாட்டின் போலீஸார் ஒருவன் வேலைக்குத் தன்னிச்சையாகவா அல்லது கட்டாயத்தின் பேரில் சென்றான் என்று நிர்த்தாரணம் செய்வார்கள். கட்டாயசேவைக்கு அனுப்பப்பட்டவன் முதலில் சுதந்திரம் பெறுவான். அவனுக்கு அடையாள அட்டையும் உணவுப் பங்கீடு சீட்டும் வழங்கப்படும். தானாகச் சென்றவருக்கு எதிரியுடன் ஒத்துழைத்தவர் என்ற அடையாளம் வழங்கப்படும்.

---

# ஆக்கிரமிப்பு ஐரோப்பாவின் கலை ஐச்வர்யங்கள்.

## நாஸிகளின் கொள்ளைப்பொருள்கள் ஜெர்மனிக்குக் கொண்டுபோகப்படவில்லை.

**(மாஞ்செஸ்டர் கார்டியனின் லண்டன் நிருபர்).**

மெர்கர்ஸிலுள்ள உப்புச்சுரங்கங்களில் அமெரிக்கப்படைகள் கண்டுபிடித்த தங்கத்துடன் காணப்பட்ட சித்திரங்களும், செதுக்கு வேலைகளும் ஆக்கிரமிப்பு நாடுகளில் ஜெர்மானியர்கள் கொள்ளையடித்தவையல்லவென்றும், அந்த மாகாணத்திலுள்ள காஸல் காலரியிலிருந்து பொருக்கி எடுக்கப்பட்டவையென்று லண்டனிலுள்ள கலைஞான வட்டாரங்களில் நம்பப்படுகிறது. நாம் வைத்திருப்பதுபோல் ஜெர்மானியர்களும் அவர்களுடைய கலைச்சின்னங்களை பூமிக்குள் வைத்திருக்கவேண்டும்.

பெர்லினிலுள்ள தேசிய காலரியின் உதவி டிரெக்டரான டாக்டர் ரேவைக் கைது செய்ததிலிருந்து, 3,000 வருஷங்களுக்குமுன் நவீன ஸ்திரீகளின் அழகை கோடிகரித்த நெபர்டைட்டின் உருவம் அங்கு காணப்படலாமென்று கெயிரோவில் ஊகித்துவருகிறார்கள். எகிப்தில் புதைகுழியிலிருந்த அதை எப்படியோ கெயிரோவிலிருந்து பெர்லினுக்குக் கொண்டு போய்விட்டார்கள். ஐரோப்பா அவர்கள் வசம் நிரந்தரமாக இருந்துவரும் என்ற எண்ணத்திலுல் ஜெர்மானியர்கள் ஆக்கிரமிப்பு நாடுகளிலிருந்து எடுத்த ஐச்வரியங்களை ஜெர்மனிக்குக் கொண்டுபோகவில்லை.

நியூயார்க், மெட்ராபோலிடன் கண்காக்ஷியின் டிரெக்டரும், கொள்ளையடிக்கப்பட்ட கலைச்சின்னங்களை புனருத்தாரணம் செய்யும் ஸப் கமிட்டியின் தலைவருமான மிஸ்டர் F. H. டெயிலர் 70 டிபோக்களிலுள்ள ஹூவர் கலை ஐச்வர்யங்கள் பிரான்ஸில் பத்திரமாக இருக்கின்றன என்று சொல்லுகிறார். தனிப்பட்டவர்களின் கலைச் சின்னங்கள், முக்கியமாக ராத்ஸ்சைல்ட் படங்கள் கெட்டுப்போய்விட்டன. ஆகிலும் ஜெர்மனிக்கு பிரான்ஸிலிருந்த எவ்விதமாக கலாச் சின்னங்களும் அகற்றப்படவில்லையென்று மிஸ்டர் டெயிலர் சொல்லுகிறார்.

ஹாலந்து, பெல்ஜியத்தைப்பற்றி ஒன்றும் வெளிவரவில்லை. ஆகிலும் உலக பிரசித்தி பெற்ற ஹூபர்ட் வான் எயிக்கின் அடோரேஷன் ஆப் தி லாம்ப் என்ற சின்னம் கெண்டிலிருந்து பிரான்ஸிலுள்ள ஏபிக்ஸூச்கு அனுப்பப்பட்டிருந்ததை ஜெர்மனி கொண்டுபோய்விட்டது.

இதாலியில் கலைச் சின்னங்களுக்கு அநேக பழுதுகள் ஏற்பட்டன. ஆனால் மிஸ்டர் டெயிலர் நேபிள்ஸிலுள்ள பொதுஜன ம்யூஸியத்தில் ரெபேலுடையவும், பிடர் ப்ரூகெலின் சித்திரமும் திருடிச்செல்லப்பட்டனவென்று சொல்லுகிறார். ப்ரூகெல் சமீபத்தில் ஸ்டாக்ஹோமிலிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

---

# தரையில் மடிந்து போகின்றன.

## ஜெர்மன் விமானப்படையின் அந்திய காலம்.

(டெயிலி டெலகிராப்).

ஜெர்மன் விமானப்படையில் பாக்கியுள்ள விமானங்கள் பெர்லினுக்கான போரில் ஒரு பங்கும் எடுத்துக்கொள்ளாதென்று பிரிடிஷ் விமானப்படை வேவு பார்க்கிறவர்கள் சொல்லுகிறார்கள்.

எண்ணெய் கிடைத்துவரும் உபயோகமுள்ள ஜெர்மன் விமானப்படை சென்ற சில நாட்களில் ஷால்ஸ்விக்—ஹாலஸ்டீனையும் வட கிழக்கேயும் நோக்கிச்சென்று வருகின்றன. ஜெர்மன் விமானப்படை இப்பொழுது விமான தளங்களின் 50 அல்லது 60 சத விகிதத்தை இழந்துவிட்டது. ஒரு எஞ்ஜினுள்ள ஆயிரம் சண்டை விமானங்களும் பைடர் வெடி விமானங்களும் எண்ணெயில்லாமல் தளஙகளில் நின்று கொண்டிருக்கின்றன.

அநேக வருஷங்களுக்குமுன் துவக்கப்பட்டு இப்பொழுது முதல் தரமான பலனளித்து வரும் பாம்பர் கமாண்டின் ஸ்ட்ராடஜிக் வெடி விமான குண்டு வீச்சின் பலன் கிடைத்துவிட்டது. உபயோகப்படக்கூடிய விமான தளங்களில் கூட்டம் அதிகரித்து விட்டது. நேசதேச விமானங்கள் அவைகளை அடிக்கடி தாக்கி வருகின்றன. அபாயத்துக்குட்பட்ட தளங்களிலுள்ள ஜெர்மன் விமானிகள் உத்தரவன்னியில் பறந்து சென்று ஹாம்பர்க் தாண்டியுள்ள விமான தளங்களுக்குச் செல்லுகிறார்கள். அங்கும் கூட்டம் மிகுதியாக இருப்பதால் அவைகள் இறங்குவதற்கு அனுமதி கிடைப்பதில்லை. மேலும் நூற்றுக்கணக்கான சண்டை விமானங்கள் பயிற்சி தளங்களிலும் விமானங்களை நிறுத்தி வைத்திருக்கும் தளங்களிலும் இறங்கி வருகின்றன.

ஜெர்மன் விமானப்படைக்கு அதிக நஷ்டமா அல்லது ஜெர்மன் சேனைக்கு அதிக நஷ்டமாவென்று சொல்லுவது சிரம சாத்யமானது. இப்பொழுது ஜெர்மனி வசமிருக்கும் தளங்கள் குழல் சண்டை விமானங்களுக்குப் போதுமானவையல்லை. புதிய ஆயுதங்களை உற்பத்தி செய்வதில் ஜெர்மனி செலுத்திய கவனம் வீணானதுபோல் குழல் வாயுவினால் ஓடும் விமானங்களைக்கட்டியதும் வீணாகி விட்டது. அதற்காக உபயோகப்படுத்திய தளவாடங்களும் பிரயாசையும் வேறு வழியில் உபயோகப்பட்டிருக்கலாம். அதைப்பற்றி இனி பேசுவதில் பிரயோஜனமில்லை.

ஜெர்மன் விமானப்படை போரில் ஈடுபட்டு சுட்டு வீழ்த்தப்படவில்லை. அது தரையிலேயே மடிந்து போய்விடுகிறது.

---

# ஜெர்மன் விமானப்படையுடன் மறைந்தார்.

## கோயரிங் எங்கே?

மான்செஸ்டர் கார்டியன்.

யூத உலகத்திலும் ராஜீய விஷயங்களிலும் ஜெர்மனியில் பீல்டு மார்ஷல் கோயரிங் இல்லாமல் ஒரு காரியமும் நடைபெறாத காலம் உண்டு. அப்பேர்ப்பட்டவர் இப்பொழுது காணப்படவில்லை. அவருடைய இல்லாமைக்கு இரண்டு காரணங்கள் சொல்லப்படுகின்றன.

முதலாவதாக ஸ்டாக் ஹோமிலிருந்து வரும் தகவல். இது நம்பத்தக்கது. அதாவது மார்ச்சு மீ 31வ பிற்பகலில் பெர்லின் எல்லைப்புறத்தில் நிறுத்தப்பட்ட ஓர் மோட்டார் காரில் கொலை செய்யப்பட்ட இருவர்களில் கோயரிங் ஒருவர். அதன் பிறகுதான் கொலையாளிகளை கைது செய்வதற்கு வேண்டிய தகவல்களைக் கொடுக்கிறவர்களுக்கு £ 8,000 வெகுமானம் தருவதாக சொல்லப்பட்டிருக்கிறது. இரண்டாவதாக, கோயரிங் தற்கொலை செய்துகொண்டார் என்றும் சொல்லப்படுகிறது. ஆனால் இதற்கு யாதொரு ஆதாரமும் இல்லையென்று ஸ்வீடனில் உள்ள கோயரிங்கின் உறவினர்கள் இப்பொழுது வெளியிட்டிருக்கிறார்கள்.

ஒரு உண்மை வெளியாகுகிறது. ஜெர்மனியில் உள்ள பெரும்பான்மையோர் ஜெர்மன் விமானப்படையைப்போல் ஹெர்மேன் கோயரிங்கும் மறைந்துவிட்டார் என்று நம்புகிறார்கள். மோட்டார் காரில் இருந்தவர்களில் ஒருவர் பிரமுகராக இருக்கவேண்டும். சாதாரணமாக இரண்டாவது லெப்டினெண்ட்களை கொலை செய்தவர்களைப்பற்றிய தகவல்களைக் கொடுப்பவர்களுக்கு £ 8,000 வெகுமதி ஏற்படுத்தப்படுவதில்லை. தாக்கியவர்கள் உடுப்புக்களைப் போட்டுக் கொண்டிருப்பார்கள் என்று பெர்லினில் உள்ள போலீஸ் விளம்பரம் சொல்லியிருப்பதனால் ஏதோ ஒரு விதமாக பதில் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறதென்று தெரிகிறது.

ஆகிலும் பெர்லினில் உள்ள நிர்வாகத்தின் பாக்கியிருக்கும் பாகம் இவை எல்லாம் வதந்திகள் என்று சொல்ல முயன்றால், அந்த நிர்வாகம் அவரை பொதுஜன மத்தியில் கொண்டு வரா விட்டாலும் ஒலிபெருக்கிலாவது அவரைப் பேசும்படி செய்யவேண்டும்.

---

# ஒகினவாவில் படைகள் இறங்கியதில் பிரிடிஷ் கடற்படையின் பாகம்.

**(கிங் ஜார்ஜ் V என்னும் கப்பலிலுள்ள பீடர் பர்ச்செட்).**

(டெயிலி எக்ஸ்பிரஸ்).

ஜப்பானுக்கும் பார்மோஸாவுக்கும் மத்தியிலுள்ள ஒகினவா தீவில் அமெரிக்கப் படைகள் இறங்கிய சில நாட்களுக்குப் பின் எதிரி பதில் தாக்குதல் செய்து அமெரிக்கர்களின் முன்னேற்றத்தைத் தடுத்துவிட்டான. ஆகிலும் அந்தத் தீவை நாம் பலமாக காப்பாற்றி வருகிறோம். அந்தப் படையெடுப்பில் பிரிடிஷ் கடற்படையின் சேவையைப்பற்றி ஒரு கண்ணோக்காளர் பின்வருமாறு சொல்லுகிறார்.

ஒகினவா படையெடுப்பில் பிரிடிஷ் கடற்படை இடது பார்ச்வத்தை ரக்ஷித்தது. ஜப்பானியர்களின் 'பைடர்' வெடி விமானங்கள் ஏப்ரல் மீ 1வ அன்று காலை 7.5 மணிக்கு பிரிடிஷ் கடற்படையைத் தாக்கின. சில வினாடிகளுக்குள் பருந்துப் பாய்ச்சல் செய்துவரும் ஜப்பானிய விமானங்களின்பேரில் கடற்படை பீரங்கிப் பிரயோகம் செய்தது. அதன் பின் ஒரு மணி நேரம் வரையில் ஜப்பானிய விமானங்கள் கடற்படையைத் தாக்கியும் ஒரு பலனும் ஏற்படவில்லை. இதே சமயத்தில் இடது பார்ச்வத்தில் கடற்படையின் தாக்குதல் நடைபெற்றது.

பிற்பகலில் ஜப்பானியர்கள் அங்கிருந்து 20 மைல்களிலுள்ள சாகிஷிமா தீவுகளில் மூன்று இடங்களில் இறங்கிவிட்டதாக நமது ரோந்துப் படைகள் அறிவித்தன. சண்டை விமானங்கள் ஜப்பானிய விமானங்களைத் தாக்கி தளத்திலேயே 14 விமானங்களுக்கு தீ மூட்டிவிட்டன. நமது விமானங்கள் திரும்பி வந்துகொண்டிருக்கும்பொழுது ஜப்பானியர்கள் மறுபடியும் தாக்கினார்கள். ஒரு விமானத்தை நாம் சுட்டு வீழ்த்தினோம். அது நமது விமானந் தாங்கிக்கு வெகு சமீபத்தில் தண்ணீரில் விழுந்து வெடித்ததால் கப்பலின் மேல் தட்டிலிருந்த விமானத்தின் டயர்களை ஜலத்தின் வேகம் நொறுக்கிவிட்டது. நமது சண்டை விமானங்கள் மற்றும் இரண்டு விமானங்களை வீழ்த்திவிட்டன. மற்ற விமானங்கள் ஓடி விட்டன.

பிரிடிஷ் சஞ்சாரிகள் இல்லாதபோனால் படையெடுப்புக்கு உதவி அளிப்பதற்காக கடற் தளபதி ஸ்புருவான்ஸ் அவருடைய படையை இரண்டு பிரிவாக அனுப்பவேண்டி இருந்திருக்கும்.

---

# ஸாகிஷிமா தீவை பஸிபிக் கடற்படை தாக்குகிறது.

**கப்பல்களுக்கும் கடற்கரைக்கும் சதாகாலம் போக்குவரத்து.**

**கிங் ஜார்ஜ் V கப்பலில் உள்ள கடற்படை உற்று நோக்காளர்.**

ஒகினவா படையெடுப்பில் அமெரிக்கர்களின் இடது பார்ச்வத்தைக் காப்பாற்றிவரும் மியாகோ, இஷிகாகி என்ற ஸாகிஷிமா தீவுகளை இரண்டு நாட்களாக பிரிடிஷ் கடற்படையைச் சேர்ந்த வெடி விமானங்கள் தாக்கிவந்தன.

இந்தத் தீவுகளைத் தாக்க விமானந் தாங்கியிலிருந்து வெடிவிமானங்கள் அணி அணியாகச் சென்றன. விமான தளங்களை நொருக்கியதினாலும் விமானங்களை அழித்ததினாலும் பிரிடிஷ் விமானந்தாங்கிகளில் சென்ற விமானங்கள் ஜப்பானுக்கு தளங்களில்லாமல் செய்துவிட்டன. அவ்விதம் செய்யாதிருந்தால் ஜப்பானிய விமானங்கள் வடக்கில் இறங்கிய அமெரிக்கப்படைகளை துன்புறுத்தியிருக்கும்.

ரேடியோ நிலையத்தின் பேரிலும் படைமுகாம் பேரிலும் இஷிகாகி நகரத்தின் பேரிலும் வெடிகுண்டுகளை நாம் போட்டபொழுது எதிரி அந்த தளங்களை உபயோகமற்றதென்று எண்ணிவிட்டான். ஏனென்றால் நமது விமானங்கள் தாக்கியபொழுது அங்கு விமான எதிர்ப்பு பீரங்கிகளும் விமான எதிர்ப்பும் காணப்படவில்லை. எதிர்ப்பு இல்லாததனால் நமது கடற்படை கடற்கரையை அணுகிற்று. 'ஹெல்காட்டுகள்' கார்ஸேர்ஸ், 'ஸீபயர்கள்', ஆகாயத்தில் ரோந்து செய்துவந்தன. அவெஞ்சர் வெடிவிமானங்கள் கடற்படையிலிருந்து கடற்கரைக்கு அடிக்கடி நடமாடிவந்தன.

இதே சமயத்தில் சில விமானங்கள் கடற்கரையில் எதிரிகளின் கப்பல்களைத் தேடின. ஆனால் ஒன்றும் தென்படவில்லை. அதன் பிறகு இரு தீவுகளிலும்உள்ள நொருக்கப்பட்ட விமானதளங்களுக்கு ஜப்பானிய விமானங்கள் திரும்பிவந்தன. அவைகள் நமது கடற்படையைத் தாக்க வந்திருக்கலாம். அது எப்படி இருப்பினும் 20 விமானங்கள் அழிக்கப்பட்டன 4 பழுதுபடுத்தப்பட்டன.

பிரிடிஷ் கடற்படையின் சுறுசுறுப்புதான் வட பக்கத்திலுள்ள விமான தளங்களை தரைமட்டமாக்கியதனாலும் படைகளுக்கு ரக்ஷணை அழித்தாலும் பூராப்படைகளையும் ஓகினுவா நடவடிக்கையில் ஈடுபடுத்தும்படியாக அமெரிக்க கடற்தளபதி ஸ்ப்ரூவான்ஸ்க்கு ஒத்தாசை செய்தது.

---

# ஜப்பானை எவ்விதம் ஆக்கிரமிப்பது ?

## ஓகினுவா பரிக்ஷார்த்தமான நடவடிக்கை.

### குவாமிலுள்ள டெயிலி மெயில் நிருபரான கிரேஹம் ஸ்டான்போர்டு.

ஓகினுவா ஜப்பானுக்கு வாசற்படி என்று சொல்லுகிறார்கள். ஓகினுவா வாசிகளோ அதைவிட்டு ஜப்பானுக்குச் செல்ல முயற்சி செய்து வருகிறார்கள். ஜீவனோபாயத்திற்கு கஷ்டப்பட்டுக்கொண்டு அங்கு இன்னும் 8,20,000 ஜனங்கள் இருக்கிறார்கள்.

அவர்கள் கிலேசமும், துக்கமும் மனச்சோர்வும் அடைந்தவர்கள். சிலருடைய முகத்தில் புன்சிரிப்பு காணப்படும். அவர்களை ஜப்பானியர்கள் தூஷித்து வருகிறார்கள். இங்கு ஜப்பானியரின் சமக்ஷேமக்கொள்கை காணப்படவில்லை. அவர்களின் எண்ணம் பூராவும் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறது. ஒவ்வொரு குடும்பத்திற்குமுள்ள இரண்டு ஏகராவில் கரும்பு சாகுபடி செய்யப்படுகிறது. அந்தத்தீவு வாசிகள் பூராவாக சக்கரவள்ளிக்கிழங்குகளையும் மொச்சை காய்களையும் உட்கொள்ளுகிறார்கள். ஆகிலும் தரைப்போரை நடத்தாத அமெரிக்கர்களை இது கொஞ்சமேனும் பாதிக்காது.

அவர்களும் ஜப்பானியர்கள் தன் சேனையில் சேர்ந்துக் கொண்டாலும் அவர்கள் ஜப்பானியர்களின் அந்தஸ்தை அடைவதில்லை. அவர்கள் தொழிலாளர் படைகளில் சேர்க்கப்படுகிறார்கள். அவர்களில் ஒருவருக்கும் கமிஷன் பெற்ற உத்தியோகங்கள் கொடுக்கப்படுவதில்லை. எவ்வகையில் பார்த்தாலும் அவர்கள் ஏழ்மைத்தனமுள்ள பந்துக்களைப் போன்றவர்கள். ஆயினும் அவர்கள் ஜப்பானியர்கள்தான். தீவைக்காப்பாற்றுவதில் சாகும் வரையில் போரை நடத்த வேண்டுமென்று தீவு வாசிகளுக்கு டோக்யோ உத்தரவிட்டுவிட்டதாக ஜப்பானியப் பிரசாரகர்கள் சொல்லி வருகிறார்கள்.

ஜப்பான் தாக்கப்படும்போது ஜப்பானியரிடையே என்ன அதிர்ச்சி ஏற்படும் என்பதற்கு ஓகினுவா படையெடுப்பு விடையை அளிக்கும். ஏனென்றால் இந்தத் தீவில்தான் முதல் முதலாக ஜப்பானியரையே தாக்கி இருக்கிறோம். இந்தத்தீவில் உள்ளவர்கள் சங்கமமாக தற்கொலை செய்து கொள்ளலாம் அல்லது அதிக வெறியுடன் போரை நடத்தலாம் அல்லது சரணாகதி செய்யலாம்.

முதல்முதலாக ஜப்பானியர்களின் மனப்பான்மையை அமெரிக்கத் துருப்புகள் இப்பொழுது ஆராய்ச்சி செய்யலாம். கிழக்கில் யுத்தத்தின் நீடிப்பு பெரும்பாலும் இதைப் பொருத்திருக்கும். டோக்கியோவையும் தொழிற்சாலை நகரங்களையும் சூபர் பறக்கும் வெடி

விமானங்கள் தாக்கி வருவதிலிருந்து ஜப்பானில் என்ன உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறதென்பதைப் பற்றியும், தரை, கடல், ஆகாயத்தில் ஜப்பானியருக்குக் கிடைத்த தோல்விகளிலிருந்து ஜப்பானில் என்ன உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறதென்றும் தெரியவரக்கூடவில்லை. ஜப்பானிய ரகசிய போலீஸ்காரர்கள் இரக்கமற்றவர்கள். ஆகிலும் ஒகினுவாவிலுள்ள துருப்புகள் அஜாக்கிரதையாக உண்மையை வெளியிட்டுவிடும்.

ஒகினுவாவைப் பிடிப்பதற்கு பல மாதங்களுக்கு முன்பே திட்டம் போடப்பட்டது. ஜப்பானில் படையெடுக்கும்பொழுது ஏற்படக்கூடிய பிரச்னைகளை விசேஷமான நிபுணர்கள் ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். ஜப்பானை எவ்விதம் ஆக்கிரமிப்பதென்ற பிரச்னையைத் தீர்க்க ஒகினுவா படையெடுப்பு பரீக்ஷார்த்தமானதென்று அவர்கள் நினைக்கிறார்கள். ஏற்கனவே ஆயிரக்கணக்கான துண்டுப் பிரசுரங்கள் தீவில் வீசப்பட்டிருக்கின்றன. தீவைப்பற்றிய தகவல்களுள்ள புஸ்தகங்களும் அந்த ஜனங்களுடன் எவ்விதம் பழகவேண்டுமென்ற போதனைகளும் அமெரிக்கத்துருப்புகளுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன.

ஒகினுவா ஜனங்கள் அவமானமடைந்து அவர்களுடைய நல்ல பெயரை இழக்க விரும்பாததால் அவர்களை அவமானமான நிலைமையில் வைக்கக்கூடாதென்று ஒரு பிரசுரத்தில் காணப்படுகிறது. "மரியாதை சம்பந்தமான சிக்கலான விதிகளைப்பற்றி கவலைப்படாதீர்கள். எப்பொழுதும் போல் நல்ல கபடமில்லாத அமெரிக்கர்களாகவே இருங்கள். இந்நாட்டிற்கு புதிதாக வந்தவர்களை என்றும் உங்களுடைய பழக்கவழக்கங்கள் '6,000 மைல்களுக்கு அப்பாலில் உண்டானவை என்றும் நீங்கள் ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள்." "ஞாபகச்சின்னங்களுக்காகத் தயாரிக்கும் அடையாளங்களை ஜாக்கிரதையுடன் தயாரியுங்கள். தன்னைக்காப்பாற்றி கொள்வதற்கில்லாமல் பொதுமக்களை ஒருபொழுதும் தொந்தரவு செய்யாதீர்கள். ஸ்திரீகளை மரியாதையுடனும், குழந்தைகளை அன்புடனும் நடத்துங்கள் என்றும் இந்தப் பிரசுரத்தில் சொல்லப்பட்டிருந்தது. ஒகினுவாவில் உள்ள ஒவ்வொரு குடும்பத்தாருக்கும் சவங்களை அடக்கம் செய்யும் அறை இருக்கிறது. ஜப்பானியர்கள் அந்த அறைகளை பலப்படுத்தி இருக்கிறார்கள். ஆகிலும் போர் முடிந்தபின் அவைகளை ஒன்றும் செய்யக்கூடாதென்று அமெரிக்கர்களுக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது.

பஸிபிக் போரில் அமெரிக்கத் துருப்புகள் அநேக சீதோஷ்ண ஸ்திதிகளையும் அபூர்வமான அநேக வியாதிகளையும் தாண்டிச்சென்றிருக்கிறார்கள். ஒகினுவாவில் யாதொரு அபிவிருத்தியும் காணப்படவில்லை. இந்தத் தீவுக்கோர்வையில் வருஷத்தில் 6, 7, தடவை புயலடித்து ஜனஙகளின் மர வீடுகளை சின்ன பின்னப்படுத்திவிடுகின்றன. ஆகையால் தீவிலுள்ள வரிகளுக்கு சாதகமாகவும் இடவசதிப் பிரச்னை இருந்துவருகிறது. மலேரியா, டைபஸ், மற்ற வியாதிகள் ஒரு வருஷத்தில் ஆயிரக்கணக்கானவர்களை கொள்ளை கொண்டுபோகிறது. விஷமுள்ள பாமபுகள் அங்கு ஏராளம். அவைகளிலிருந்து உயிர்ச்சேதம் அதிகமாக ஏற்பட்டதால் சென்ற சில வருஷங்களாக ஒரு பாம்பைக் கொன்று போலீஸ் வசம் ஒப்படைப்பவருக்கு வெகுமதி கொடுத்துவருகிறார்கள்.

---

# ஜப்பானியர்கள் தற்கொலைப் படைகளை உபயோகிக்கிறார்கள்.

## காமிகாஸி படைகள்.

(டெயிலி மெயில்).

இது யுத்தத்தில் மிகவும் விநோதமான கதை ஜப்பானின் "நிச்சயமாக அடித்து விட்டு நிச்சயமாக உயிரை இழந்துவிடு" என்று சொல்லும் படையின் கதை. அப்படையினர் வெடிமருந்துள்ள விமானங்களை கப்பல்களின் மேல்தட்டுகளில் நொருக்கி அங்கே மாண்டு போகிறார்கள்.

அவர்களுக்கு காமிகாஸி படையென்றும் அல்லது தெய்வீகக் காற்று விசேஷத் தாக்குதல் செய்யும் படை என்றும் பெயர் உண்டு. அவர்கள் அமெரிக்க, பிரிடிஷ், பஸிபிக் கடற்படையை முடமாக்க உபயோகப்படுத்தப்படுவார்கள். அவர்கள் சிறு பையன்கள். வெறிபிடித்த முறையில் சுதந்திர ஆர்வமுள்ளவர்கள்.

அவர்கள் ஏராளமான வெடிமருந்துகள் உள்ள விமானங்களில் புறப்படுகிறார்கள். நிச்சயமாக அடித்துவிட்டு உயிரை விடுங்கள் என்று அவர்களுக்கு உத்தரவிடப்படும். அவர்களுடைய நடவடிக்கை பரம ரகசியமாக இருக்கும். அவர்கள் விசேஷ ஆடைகளை அணிந்து கொண்டும் முன்னோர்களின் உறை வாளுடன் இருப்பது அல்லது இறப்பது என்ற தீர்மானத்துடன் புறப்படுவார்கள். கடைசித் தருவாயில் சிலர் தைரியத்தை இழந்து எதிரிகளிடம் கைதியாகி விடுவார்கள்.

மேற்கு பஸிபிக்கில் நம்முடைய படைகளை அநேக மாதங்களாக இந்தத் தற்கொலை விமானிகளைக்கொண்டு ஜப்பான் தாக்கி வந்தது என்று வெளியாயிற்று. ஓகிஞவா தீவுக்கு அருகில் நமது கடற்படை இந்தப் படையைத் தாக்கியதில் ஜப்பான் 118 விமானங்களை இழந்தது. அமெரிக்காவின் ஒரு நாசகாரிதான் மூழ்கடிக்கப்பட்டது. மற்ற கப்பல்கள் பழுதுபட்டன.

காமிகாஸிப் படை என்பது டோக்கியோவுக்கு நேசதேசப்படை முன்னேறுவதைத் தடுக்க ஜப்பான் கண்டுபிடிக்க முயலும் ஒரு ரகசிய ஆயுதம். உத்தியோக முறையில் பின் கண்ட அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது. எதிரி நமது வெற்றிகரமான தாக்குதல்களைத் தடுக்க ஏராளமான விமானங்களையும் விமானிகளையும் உபயோகித்திருக்கிறான். சில கப்பல்கள் பழுதுபடுத்தப்பட்டிருக்கின்றன. ஆனால் ஒரு யுத்தக் கப்பலாவது சஞ்சாரியாவது மூழ்கடிக்கப்படவில்லை. சில சிறிய கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டிருக்கின்றன. ஆகிலும் இவைகளால் தாக்கப்பட்ட அநேகம் கப்பல்கள் அதற்குப் பின்னும் நடமாடிக்கொண்டிருந்தன.

இந்த தற்கொலைப்படைத் தாக்கி அழிக்க நாம் உபயோகமுள்ள முறைகளைக் கையாண்டு வருகிறோம்.

---

பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனாமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் சூபரின்டென்டெண்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.

---

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 246 (1-வது பிரிவு).

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 28- 4-45 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை 6.00 | 2- 5-45 | அன்னவாசல் | ... மாலை 7.00 |
| 29- 4-45 | ஆலங்குடி | ... ,, 7.00 | ,, | கீழக்குறிச்சி | ... ,, 7.30 |
| ,, | ராசியமங்கலம் | ... ,, 7.30 | 3- 5-45 | நல்லூர் | ... ,, 7.00 |
| 30- 4-45 | திருமெய்யம் | ... ,, 7.00 | ,, | மாத்தூர் | ... ,, 7.30 |
| ,, | மேலூர் | ... ,, 7.30 | 4- 5-45 | கீழாநிலை-புதுப்பட்டி | ... ,, 7.00 |
| 1- 5-45 | புலியூர் | ... ,, 7.00 | ,, | கீழாநிலைக்கோட்டை | ... ,, 7.30 |
| ,, | கண்ணங்குடி | ... ,, 7.30 | | | |

### பிரஸங்கம் 247 (2-வது பிரிவு).

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5- 5-45 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை 6.00 | 9- 5-45 | அரிமளம் | ... ,, 7.00 |
| 6- 5-45 | கீரனூர் | ... ,, 7.00 | ,, | ராயவரம் | ... ,, 7.30 |
| ,, | நாஞ்சூர் | ... ,, 7.30 | 10- 5-45 | பொ. புதுப்பட்டி | ... ,, 7.00 |
| 7- 5-45 | குடுமியாமலை | ... ,, 7.00 | ,, | வேந்தம்பட்டி | ... ,, 7.30 |
| ,, | பாம்பூர் | ... ,, 7.30 | 11- 5-45 | மலையடிப்பட்டி | ... ,, 7.00 |
| 8- 5-45 | பெருங்களூர் | ... ,, 7.00 | ,, | கிள்ளுகோட்டை | ... ,, 7.30 |
| ,, | ஆதனக்கோட்டை | ... ,, 7.30 | | | |

---

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | | | |
|---|---|---|---|
| 28— 4—45 | வெட்டம்விடுதி. | 5— 5—45 | திருமயம். |
| 29— 4—45 | மருதன்கோன்விடுதி. | 6— 5—45 | ஏம்பல். |
| 1— 5—45 | ராமச்சந்திரபுரம். | 8— 5—45 | கோனாபட்டு. |
| 2— 5—45 | கரம்பக்குடி. | 9— 5—45 | கீழாநிலை-புதுப்பட்டி. |
| 3— 5—45 | கீழாநிலை. | 10— 5—45 | ஆலங்குடி. |
| 4— 5—45 | புதுக்கோட்டை. | 11— 5—45 | புதுக்கோட்டை. |

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,600—29-4-45.